தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் : 224

# நீதி நூல்

## (Moral Code)

சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர் :

பேராசிரியர் கி. கோதண்டபாணி, M. A., B. O. L.,



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்.

1985 ] [ விலை : ரூ. 5-00

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் : 224

# நீதி நூல்

(Moral Code)

சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர்

பேராசிரியர் கி. கோதண்டபாணி, M. A., B. O. L.,

முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்,

அ. வீ. வா. நினைவு திரு. புட்[illegible]லூரி, பூண்டி.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்.

1985] [விலை : ரு. 5-00

முதற் பதிப்பு : 1985

வெளியீடு :

தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையம், தஞ்சாவூர்.

★★
★

Published with the financial assistance from the
Ministry of Education and Social Welfare
Govt. of India

★★
★

பதிப்பகம்

ஜெமினி அச்சகம், தஞ்சாவூர்.

# PREFACE

'Niti Nool' is a Tamil poetical work consisting of 98 verses written by an unknown Tamil poet, preserved in the Tanjore Sarasvati Mahal Library by the rulers of Thanjavur. This type of didactic poems are popular in all literatures, especially in Tamil. Works of this kind generally contain verses from ancient sources, the puranas and the Itihasas and the works of famous poets. These works consist of caronical codes covering not only of moral precepts but also lessons of worldly wisdom, politics and rules of conduct in daily life. This Library has already published one book in this series 'Niti Satakam' in Sanskrit along with Tamil and English translation. Now this work 'Niti Nool' is being published in Tamil along with English translation.

The retired Tamil Professor Thiru K. Kothandapani a Guest Editor of this Library has done this work excellently. Our thanks are due to him for the same and also to the press for neat execution.

It becomes our duty to thank the Government of India for their generous grant for publication of books.

T. R. Ramaswamy, I. A. S.,
District Collector and Director,
T. M. S. S. M. Library.

Thanjavur
24—10—85

## AN APPEAL

Manuscripts on Palm Leaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation, and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also of the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The manuscripts so presented will be accepted and acknowleged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar-King of Tanjore, Rajah Serfoji, has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world-famous 'Sarasvathi Mahal Library'. It is open to you to share the honour of Serfoji, in your own measure, by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it, will you hasten to take it up? The Library waits for your answer.

Collector & Director,
T. M. S. S. M. Library, Thanjavur.

# FOREWARD OF THE EDITOR

I deem it a distinct honour to be invited by the learned and pious District Collector of Thanjavur Thiru T. R. Ramasami, I A. S. to serve as Guest Editor for this work namely 'Neethi Nool' full of moral code correlated with the proverbs. The name of the author of this volume is not known and the proverbs, colloquial usage of simple words in this work reveal that he lived in the last century.

Mr A. Panchanathan, M. A., B. Lib. Sc., Administrative Officer in-charge of Thanjavur Maharaja Serfoji's Sarasvati Mahal Library who has progressive views to improve this library has exhorted me to undertake the editing work for 'Neethi Nool' with Tamil and English commentaries. I immediately accepted the offer to be editor of this work with elaborate Tamil and English Cannotations which are rarely included.

No Administrative officer so far expected the English Annotation along with the one in regional language. Therefore my heartfelt indebtedness are due to our learned Collector, progressive Administrative Officer in-charge of this library.

However, I am fully aware of my own imperfection and defects. Therefore I heartily exhort the reading devotional public not to heed this defect and lend your helping hand in making this book useful for routine life. Lastly my sincere and never ending thanks are due to my worshipping deity Lord Krishna for His blessings showered on me to complete this work.

Thanking you,

*K. Kothandapani,*
Ex Prof. and Head of the
Dept. of Tamil,
A.V.V.M.Sri Pushpam College,
Poondi

Thanjavur
5-10-1985

## முகவுரை (ஆய்வுரை)

'நீதிநூல்' என்ற பெயரால் அமைந்த இவ்வேட்டுச் சுவடியில் முன்னிரண்டு பாடல்கள் கிடைக்கப் பெறாமலும் பின்னிரண்டு பாடல்கள் இல்லாமலும் மூன்றாம் செய்யுளில் தொடங்கி தொண்ணூற்று எட்டாம் செய்யுளோடு நிறைவுறு கின்றது இந்நூல் என இச்சுவடிகளை ஆய்வோர் உணர்வர். முதலிரண்டு பாடல்கள் அமைந்த ஏட்டுச்சுவடி காணப் பெறவில்லை என்பது உண்மையே. ஆனால் இந்நூலியற்றிய கவிஞர் இந்நூலினை 100 பாடல்கள் கொண்ட நூலாக ஆக்க விரும்பாமல் தொண்ணூற்று எட்டாவது பாடலோடு நிறைவு செய்து இந்நூல் கற்றார், கேட்டார் பெரும்பயனைக் கூறி அப்பாடலோடு முடிவு செய்து தலைக்கட்டுகின்றார். இந் நூவில் எடுத்தாளப்பட்டுள்ள பழமொழிச் செய்தி, உலகியற் சொற்கள் பரவை வழக்கு முதலியன பற்றி ஆயும்போது இந்நூலாசிரியர் காலம் ஓரிரு நூற்றாண்டு முன்னதாய் பதினெட்டின் தொடக்கமாயும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகவும் இருக்கலாம் எனயூகித் தறிய இயலுகின்றது. நம் நாட்டில் கடைச்சங்க காலத்திலும் அதனையொட்டிய காலத்திலும், சமணர்கள், பௌத்தர்கள் தமிழ்த்தொண்டாற்றத் துவங்கிய காலத்திலும் மிகுதியாக அறநூல்களே தோற்றம் பெற்றன என அறியலாம். கடைச் சங்கத்தினைச் சார்ந்தும், ஒட்டியும் அமைந்த காலப்பகுதியில் தோற்றம் எடுத்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மிகுதியும் அறம் உணர்த்துவனவாகவே அமைந்துள்ளன. இந்நூல் வரிசையுள் தலையாய அறநூல்களாக நாலடியாரும், முப்பாலாகிய திருக்குறளும் விளங்குவதனை நாம் அறிவோம். இவைகட்கு அடுத்த நிலையில் பழமொழி விளங்குவதனையும் அறியலாம். பின்வந்த நீதிநூல், அறநூல் ஆசிரியர்கள் எல்லாம் பெரிதும் நாலடியார், திருக்குறள், பழமொழி ஆகிய இம்மூன்று நூல்களையுமே முதல் நூல்களாகக் கொண்டு அறநூல் இயற்றத் தலைப்பட்டனர். இம்முறையில் அமைந்த நூல்களே சதகம், அந்தாதி போன்றவைகளாகும். இவ்வாறு உலகோர்க்கு நீதியுரைக்கத் தலைப்பட்டு இந்நூலாசிரியர் பழமொழிகளைச் செய்யுளின் கடையடியில் எடுத்தாண்டு அதற்கேற்றாற் போன்ற கருத்துரைகளை மேல் மூன்றடிகளிலும் விளக்கிக் கூறி 'நீதிநூல்' என்ற பெயரால் இந்நூலை ஆக்கியளித்துள்ளார்கள். பெரும்பாலும் இன்று உலகில் வழங்கும் பழமொழிகளே மிகுதியும் எடுத்தாளப் பட்டுள்ளன.

## ஆசிரியர் சமயம், சார்ந்த ஊர்.

இந்நூலாசிரியர் ஒவ்வொரு பாடலிலும் பாட்டுடைத் தலைவராகச் சோழநாட்டின் வளஞ் சார்ந்த தண்டலைப் பதியின் எண்டோள் முக்கண்ணனாக விளங்கும் சிவபிரானையே விளித்து நீதி யுரைக்கின்றார். இவர் இந்நூலில் கிடைக்கப்பெற்றுள்ள 96 பாடல்களில் 97ம் பாடல் ஒன்று நீக்கி (ஈற்றயல் பாடல்) மற்ற அனைத்துப் பாடல்களிலும் தண்டலைத் தலைவனை விளித்தே கவிதை ஆக்கியுள்ளார். சோழநாட்டில் திருவாரூர் என்ற தலத்திற்கு அண்மையில் அமைந்த பதியே சோலை சூழ் தண்டலை என்ற ஊராகும் எனவும், அப்பதியில் அமர்ந்துள்ள செஞ்ஞாயிற்று நிறத்தம்மானே தண்டலை நீணெறிளியார் எனவும், அவரையே இந்நூலின் பாட்டுடைத் தலைவராக அமைத்து இந்நூலாசிரியர் பாடியுள்ளார் எனவும் அறிகின்றோம். இத்தன்மையால் இந்நூலாசிரியர் ஆழ்ந்த சைவ சமயப் பற்றுடையர் என்பது அறியக் கிடக்கிறது. தேவார முதலிகள் மூவரும் சென்ற நெறியில் இந்நூலாசிரியர் சென்று இறைவனுக்கு அடைமொழி புணர்த்துக் கூறுகின்றார். கொன்றை, ஆத்தி, அரவம், கங்கை, மழு, மதி முதலிய பொருள்களைச் சூடிய சடாமுடியன் என்று கூறும் போது நம் கண்முன் நிற்பவர்கள் தேவாரம் புனைந்த மூவர் முதலிகளே ஆவார்கள் மேலும் சோழவள நாட்டின் வளமிக்க பகுதிகளுள் ஒன்றாகத் தண்டலை என்னும் ஊர் இந் நூலாசிரியரால் குறிக்கப் படுகின்றது. இத்தகைய சான்றுகளால் இந் நூலாசிரியர் சிவனை மறவாச் சிந்தையினர் என்பதும் எண்டோள் முக்கண் எம்மானை அநவரதமும் ஆராதித்துப் போற்றும் பண்பின ரென்பதும் அறியப் படுகின்றது. இந்நூலாசிரியர் இயற்பெயர் அறியப்பட வில்லை என்றாலும் அவர் சோழ நாட்டைச் சார்ந்தவர் எனவும், சிவநெறிச் செம்மல் எனவும், 'எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணி இரங்கவுன்றன். தெய்வ அருட் கருணை செய்யாய்பராபரமே' என வேண்டிய தாயுமானவர் போல் உலகோர் அனைவரும் நன்னெறி மேற்கொண்டு ஒழுக்கமுடன் வாழ வேண்டும் என்ற அழுந்திய கருத்துடன் அறமுரைத்தவர் எனவும் இந் நூலைக் கற்றவர் எளிதில் உண்ரலாம். மேலும் இந்நூலாசிரியர் எடுத்தாண்டுள்ள சொல்லாட்சி கொண்டு மிக அண்மைக் காலத்தே வாழ்ந்தவர் என அறிய இயல்கிறது.

## இந்நூல் அமைப்பு முறை(அதிகாரப்பகுப்பு)

இந் நூலாசிரியர் ஒவ்வொரு பாடலுக்கும் வள்ளுவர் திருக்குறளில் அதிகார அடைவு குறித்தது போலத் தனித் தனியே தலைப்பிட்டு 'நீத்தார் பெருமை' புகழ், 'புலால் மறுத்தல் என்பது போல் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். 35 பாடல் வரை இவ்வாறு தனித்தனி அதிகாரத் தலைப்பிட்டு சென்றவர் பின்னர் இந்நூலின் இறுதிப்பாட்டு வரை 'தெய்வச் சாயல்' என்ற 35ம் பாடலுக்கு ஈந்த தலைப்பினோடு விட்டு விடுகின்றார். ஆக இவர் இயற்றிய செய்யுள் 35ம் அதனைத் தொடர்ந்து வரும் செய்யுட்களும் 'இதே தெய்வச் சாயல்' என்ற அதிகாரத்தில் இடம் பெறுவதாக நாம் அமைத்துக் கொள்ளல் வேண்டும். சிலபாடல் அதிகாரத் தலைப்பிற்கு நேர் மாறான தலைப்புக்களில் இடம் பெற்றிருந்தன. இது பின்னோர் பெயர்த்து எழுதியதால் ஏற்பட்ட தவறு என உணர்ந்து பாடல் செய்திக்கேற்ற தலைப்பினைத் தந்துள்ளேன் புலால் மறுத்தல் என்ற அதிகாரத் தலைப்பு அதனோடு தொடர்பே இல்லாத வேற்று பாடலிற்குத் தலைப்பாகத் தரப்பட்டிருந்தது. இவ்வாறு ஏடு பெயர்த்து எழுதி யோரால் தவறாக மாற்றம் பெற்றிருந்த தலைப்புக்களைப் பாடல் கருத்துக் கேற்ப: தலை தடுமாற்றமாக அமைந்திருந்த நிலையினை மாற்றிப் பொருத்தமான தலைப்புகளை புணர்த்தி யுள்ளேன். இந்நூலாசிரியர் நூறு பாடல்கள் இயற்றி இந்நீதி நூலினை நிறைவு செய்யக் கருதினைரேனும் ஊழ்வயத்தால் முதலிரு பாடல்களும் கடையிருபாடல் களும் காணப் பெறாமல் 98 பாட்டுகளோடு இந்நூல் நிறைவு பட்டுள்ளது இந்நூலாசிரியர் வழியிலே கூற வேண்டுமானால் 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது என்ற பழமொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இவர் எடுத்தாண்ட பழமொழிகளில் சிலவற்றை ஆய்வோம். சிவபிரான் சென்னியில் உள்ள பாம்பு கருடா சுகமா? என வினவியது எனவும் நிறைகுடமே தளும்பும் குறைகுடம் தளும்பாது' எனவும் 'நன்மை செய்தார் நலம் பெறுவர் தீமை செய்தார் துன்புறுவர்' எனவும் 'அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரங் பொன் கொடுத்தாலும் பெற முடியாது எனவும் 'வழவழத்த உறவுக்கு வயிரமுள்ள பகையே மேல் எனவும்'' 'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு நற்பெண்டிர்க்கு ஒரு வார்த்தை' எனவும், 'காகம் அன்னநடை பயிலப்போய் தன்னடையும்

கெட்டதுபோல்' எனவும், 'பன்றி பல ஈன்றும் பயன் என் யானை ஒன்று ஈன்றாலே போதாதோ' எனவும் 'சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி போல' எனவும், 'இல்லாது வாராது உள்ளது போகாது' எனவும் 'உப்பிட்ட வரை உலகம் உன்னும்' எனவும், 'காட்டில் எரித்த நிலவு கானலில் பெய்த மழை போல', எனவும் மழைவிட்டும் தூவானம் விட்டபாடில்லை', எனவும் 'கங்கையிலே படிந்தாலும் பேய்ச் சுரைக்காய் நற்சுரைக்காயாகாது' எனவும். 'பொறுத்தவர் பூமியாள்வார் பொங்கினார் காடாள்வர்' எனவும், 'காதவழிப் பேரில்லான் கழுதையோடு ஒப்பான்' எனவும் 'செவிடன் காதில் ஊதிய சங்குபோல்' எனவும் 'சந்திரனைப் பார்த்து நாய் குலைத்தாற் போல்' எனவும் 'மரம் வைத்தவர் நீரூற்றுவார்' எனவும் 'அரசு அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்' எனவும் 'துறவிக்கு வேந்தன் துரும்பு' எனவும் 'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு' எனவும் 'காரிகை கற்று கவிபாடல் போல்' எனவும் 'நெற்றிவிழி காட்டினும் குற்றம் குற்றமே' எனவும் 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்க' எனவும் 'கொடுங்கோல் மன்னன் நாட்டினும் கடும்புலி வாழும் காடு நன்று' எனவும் 'அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்' எனவும் 'பசுவினைக் கொன்று செருப்புத் தைத்தது போல' எனவும் 'கையில் வெண்ணெயிருக்க நெய்க்குத் தேடியலைதல் போல்' எனவும் குரங்கு கைப்பூமாலை போல' எனவும், 'கைப் புண்ணிற்குக் கண்ணாடி பார்ப்பது போல் எனவும் சூடுண்ட பூனை அடுக்களை நாடாது எனவும் இந் நூலாசிரியர் எடுத்தாண்டுள்ள பழமொழிகளைக் கொண்டு அவரது சமய, சமுதாய, உலகியல் அறிவினை வியந்து போற்ற வேண்டும். இப் பழமொழிகளை உவமையாகக் கொண்டு இவர் எடுத்தாளுகின்ற பொருள். (உவமேயம்) உலகியற் கருத்துப் பொதிந்து சுவைமிக்கதாய் விளங்குவது பாராட்டற்குரியதாய் அமைந்துள்ளது. ஆகவே இந்நூலாசிரியன் நிறைபுலமை, ஆழ்ந்த சைவ சமையப்பற்று உலகியல் அறிவு முதலியன அகன்று விரிந்ததாய் விளங்குகின்றது

# பதிப்புரை

இந் நீதிநூலினைப் பதிப்பிக்கும் நற்பணியில் என்னை உய்த்த தஞ்சை மாவட்ட ஆட்சியாளரும் சிந்தனைத் தெளிவும் நல்ல தமிழறிவும் வாய்க்கப் பெற்றவரும் ஆகிய பெருந்தகையார் திரு. T. R. இராமசாமி I. A. S அவர்கட்கும் இப்பதிப்புத் துறையின் என் அனுபவத்தை நன்கு உணர்ந்து எனக்கு 'நாராயண சதகம், நீதிநூல் ஆகிய நூல்களைப் பதிப்பிக்க முன்னோர் நெறியிற் சென்று வாய்ப்பளித்த, தஞ்சாவூர் மாமன்னர் சரபோசியின் சரசுவதி மகால் நூல்நிலைய பொறுப்பு நிர்வாக அலுவலர் திரு. அ. பஞ்சநாதன், M. A. B. Lic . Sb அவர்கட்கும் என் ஆழ்ந்த அகம் நிறைந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன். இந் நூலகப் பொறுப்பு நிர்வாக அதிகாரி அவர்கள் இந்நீதி நூல் செய்யுளை ஐயமறப் பதிப்பித்து அழகான பொழிப்புரை தருவதுடன் ஆங்கிலப் பெயர்ப்பும் (Translation) ஏற்றவாறு தரவேண்டும் என வேண்டிக் கொண்டார்கள். அன்னாரின் அன்பு வேண்டுகோளை ஏற்று இந் நூலிற்குப் பொழிப்புரை இனிய தமிழில் அளித்ததுடன் ஏற்ற ஆங்கிலப் பெயர்ப்பும் அளித்துள்ளேன். இதனைத் தமிழகம் ஏற்றுப் போற்றும் என்னும் துணிவுடையேன் இந் நூலகத்தின் கௌரவச் செயலராய் இருந்து சிறந்த பணியாற்றிய ஆன்றவிந்தடங்கிய சான்றோர் அமரர் திரு. O A. நாராயணசுவாமி B. A B. L அவர்கள் என்னை 1967 ம் ஆண்டு *'புல்லையந்தாதி'* என்ற புனிதனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூலை பதிப்பிக்க உறுதுணை செய்தார்கள். அதன்பின்னர் 1976 ம் ஆண்டு இந் நூலகக் கௌரவச் செயலராய் பணி செய்த பழுத்த தமிழ்ப் புலமையும் சிவநெறி போற்றிய செம்மலாகவும் வாழ்ந்த அமரர் வித்துவான் அ. வடிவேலன் அவர்கள் 'சஞ்சன் அம்மானை' என்ற நூலை வெளியிட மிகவும் ஊக்குவித்துப் பணி கொண்டார்கள். அவர்கள் நெறியினையே பின்பற்றி இன்றைய மாவட்ட ஆட்சித் தலைவர் பெருந்தகை திரு. T. R. இராமசாமி I A S. அவர்களும், நூலகப் பொறுப்பு அதிகாரி திரு பஞ்சநதம் MA. Bc. Slib அவர்களும், நாராயண சதகம் அடுத்து 'நீதிநூல்' என்ற இரு நூலினை அளித்து பதிப்பிக்க ஒல்லும்வகை உதவினார்கள். ஆகவே இப்பணியில் உய்த்த மேற் குறித்த பெருந்தகைகட்கும் என்னை இப் பணியில் உய்க்க என்னை அனுமதித்த பூண்டி அ. வீரையா வாண்டையார் நினைவு

திரு புட்பம் கல்லூரிச் செயலர், தாளாளரும் தத்துவ அறிஞரும் செந்நெறியாளரும், வடமொழி, தென்மொழி, ஆகிய இருமொழிப் புலமையும், ஆங்கில மொழி ஆற்றலும் பெற்று விளங்கும் கல்விக்காவலர் உயர்திரு. கி. துளசிஜயா வாண்டையார் அவர்கட்கும் என் அகம் நிறைந்த நன்றியினை உரியதாக்குகின்றேன். நிறைவாக, இத்தகு நற்பணிகளில் எல்லாம் என்னை பங்கு பெற உய்க்கும் திருவருட் பேற்றினை என்றும் மறவேன். எடுத்த பணி இடையூன்றி முடிய எனக்கு இடையறாது உதவியருளிய ஓங்கியுளகலந்த உத்தமன், காரார் திருமேனிக் கண்ணபிரானின் கழலிணைகள் என்றும் என் சென்னியன, எனக் கூறி நிறவு செய்கின்றேன்.

பேராசிரியர் **கி. கோதண்டபாணி**

# நீதி நூல்

**நீத்தார் பெருமை** The fame of austere.

3. "அட்டதிசை எங்கணும்போய் அலைந்தாலும் பாதாள
மதில் சென்றாலும்
பட்டமென வானூடு பறந்தாலும் என்னபதில் பல
னுண்டாமே
பிட்டுவிற்கா மண்சுமந்த தண்டலை நீணெரியே முன்
பெரியோர் கையில்
இட்டபடி யொளிந்து சும்மா பேராசைப்படி வருவதில்லை
தானே".

*பொழிப்புரை:-* உலகில் நிறைந்து வியாபித்துள்ள எட்டுத் திக்குகளில் சென்று அலைந்தாலும், பாதாளத்தில் சென்று பார்த்தாலும், வான வீதியில் பட்டமாகப் பறந்து திரிந்தாலும் அதனால் எனன பயன்? திருவாலவாய் என்னும் மதுரையம்பதியில் வந்தியென்னும் முதியவள் பிட்டினுக்காக மண்சுமந்து வையைநீர்ப் பெருக்கினை அடைத்த மதி தரித்தோனே! நீத்தாரின் பெருமை பெரியோர்களது கையில் விருப்பப்படி ஒளிந்து சும்மா வருவதில்லை. நீத்தார் பெருமை நினைத்தற்கு எளியதன்று என அவர்களது பெருமையினை வியந்து உரைக்கின்றார் ஆசிரியர்.

Oh ! Merciful God ! For the small diet (i.e) called pittu offered by the old lady of Madurai who was without encumberance, you did the Job of adding earth for the embankment of Vaigai river when it was flooded. The fame and popularity of austere can't be measured even when we wander towards eight directions of earth and into underneath world and as a kite flying in the sky. The author explains briefly the fame and name of those who lead austere life.

### அறன் வலியுறுத்தல் 'The emphasis of doing charity'

4. "தன்மமே செயவேணும் தண்டலைநீணெரியாரே தயவு
செய்வார்
வன்மவினை செயவேண்டாம் வேண்டாம்.
பிறரையொன்று வருத்தவேண்டாம்
கன்மநெறிவர வேண்டாம் வேண்டுவது பிறர்க்குபகாரஞ்
செய்தல்
நன்மை செய்தார் நலம் பெறுவார் தீமை செய்தார்
தீமை பெற்று நலிவர் தாமே"

பொழிப்புரை :- நன்செய் சூழ்ந்த தண்டலை நீணெரியா ராகிய இறைவா ! உலகில் அறத்தினை உறுதியாக ஆற்றல் வேண்டும். அன்புடையோர்க்குத் தீமை செய்ய வேண்டாம். அறவே வேண்டாம். பிறரை எவ்வாற்றானும் வருத்த வேண்டாம். தீயநெறியில் செல்லவேண்டாம். பிறர் நலம் பேணிப் பிறர்க்குதவி செய்தலே பெருமைக்குரிய பண்பாகும். பிறர்க்கு நன்மை செய்தோர் நன்மை எய்தலும் தீமை புரிவோர் துன்புறுதலும் உலக இயற்கை என உணர்க என்கிறார் ஆசிரியர்.

Oh God ! 'Dont speak ill of others. Others won't be tortured by your brutal actions. Be useful to others' that is the best way and virtuous behaviour to be adopted in our day to day life. If you do harm to others you will reap the consequences. Therefore 'Do good to others allowing yourself to be secured good by others. The author in this verse emphasises that everyone of us should have virtuous habits cultivated.

### இல்வாழ்க்கை 'House hold life with kith and kin'

5. "புல்லறிவுக் கெட்டாத தண்டலையார் வளந்தழைத்த
பொன்னார் நாட்டில்
சொல்லாத மாதவம் புரிந்த சவுபரியும் துறவாததைத்
துறந்து மீண்டாள்

நல்லறிவால் வள்ளுவர் போல் குடிவாழ்க்கை
மனைவியுடன் நடத்தியாகில்
இல்லறமே அழகாகும் துறவறமும் பழிப்பின்றே
இயற்கையாமே"

*பொழிப்புரை :* புல்லறிவுக்கு எட்டாத இறைவன் குடியமர்ந்துள்ள பொன்னி நாட்டில் துறவாததனைத் துறவாமல் இல்லறத்தே நிலைத்து நிற்பர் மேலும் நல்லறிவு மிக்க வள்ளுவப் பெருந்ததகை போல் மனையறம் நிகழ்த்தி வாழ்ந்தால் இல்லறமே சிறந்த அறமாகும். துறவறமும் பழிப் பில்லாத அறமுமாகும் என ஆசிரியர் இல்லறத்தின் ஏற்றத் தினையும் துறவறத்தின் தூய்மையினையும் போற்றுகின்றார் இப்பாடலில்.

Oh Almighty ! Thou hath been above innocence. The household domestic life with wife and children is appreciated and celebrated in epics provided the life is led as by Valluvar and Vasuki. The author conceives that even austere life is not one to be disliked.

## **'வாழ்க்கைத் துணை நலம்'** The outstanding quality of better half

6. "முக்கணர் தண்டலை நாட்டில் கற்புடைய மங்கையர்
மகிமை மொழியப்போமோ
ஒக்கு மெரிகுளிர வைத்தாள் ஒருத்தி, வில் வேடனை
எரித்தாள் ஒருத்தி மூவர்
பக்கமுற அமுதளித்தாள் ஒருத்தி எழுவர் நடத்தும்
பான்மை எல்லாம் ஒழிய
கொக்கெனவே யிருந்தனையோ கொங்கணவா
யென்றொருத்தி கூறினாளே"

*பொழிப்புரை :-* கற்புடைய நங்கயைரை வாழ்க்கைத் துணையாகக் கொண்டால் அவ்வாழ்க்கை மிகவும் போற்றக் கூடிய வாழ்க்கையாகவே சிறந்து விளங்கும். மூன்று கண்களை யுடைய சிவபிரான் உறையும் தண்டலை நாட்டுக் கற்புடைய

நங்கையர் பெருமை சொல்லில் அடங்காச் சிறப்புடையதாகும். கற்பரசி ஒருத்தி நெருப்பினைத் தண்மையுறச் செய்தாள்: வில் வேடனை எரித்தாள்மற்றொருத்தி. மும்மூர்த்திகளும் பக்கத்தே அமர்ந்திருக்க உணவாம் அமுதை அளித்தாள் இன்னொருத்தி இவ்வாறு பத்தினியர் எழுவர் அன்று வாழ்ந்தனர். அவர்களுள் ஒருத்தி தன்னை உருத்து நோக்கிய தவமுனிவரை நோக்கிக் 'கொக்கென எண்ணினாயா கொங்கணவா' என்று எள்ளி நகைத்து கற்பறத்தில் தலை நின்றாள் மற்றுமோர் அணங்கு எனக் கற்பரசிகளின் பொற்பினை விளக்குகின்றார் ஆசிரியர்.

In this verse the poet gives a vivid portrayal of the fame and name of the women with chastity. In those days seven such chast women were celebrated in ethical literatures such as one cooled down the fire and another destroyed the hunter. The nextone in the midst of Trinity of Gods she had given a fine feast then the last one questioned the bonafide of a sage who had seen her with anger.

7. நன்றிதரு பிள்ளையொன்று பெற்றாலும் குலமுழுதும்
நன்மையுண்டாம்
அன்றறிவில்லாத பிள்ளை யொருநூறு பெற்றாலும்
ஆவதுண்டோ?
மன்றில் நடம் புரிவாரே ! தண்டலையாரே ! கொன்னே
வருடந்தோறும்
பன்றிபல ஈன்றும் என்ன ? குஞ்சரம் ஒன்று ஈன்றதனால்
பலனுண்டாமே"

*பொழிப்புரை :-* நன்மையுள்ள பிள்ளை ஒன்று இருந்தாலும் குலத்தின் பெருமையைக் காத்து நிற்கும். அறிவில்லாத நூறு பிள்ளைகளைப் பெற்றாலும் அதனால் என்ன பயன் ஏற்படும்? அம்பலத்தே நடம் புரியும் தண்டலை அண்ணலே ! பன்றி பல குட்டிகளைப் பயந்தாலும் பயன் என்? யானை ஒரு கன்று ஈன்றாலே எல்லாச் சிறப்பினையும் எய்துகின்றதே என அறிவுடை மக்களைப் புகழ்ந்தும் அறிவிலாரை இகழ்ந்தும் உரைக்கின்றார் ஆசிரியர்.

The virtuous son, being only one to their parent, there is no harm in it but the wicked sons they are numerous to their parents, what is the use of it ? This is compared to Pandavas and Gauravas of our ethical literature Maha Baratha. Even-though the pig has brought forth numerous young ones in one delivery, What is the use of it ? but the elephant delivers one calf in number that is considered to be most valuable.

## அன்புடைமை (Being Kindness)

8. "அல்ல மருங்குள வாளை வரகுண பாண்டியராசன் நம்பா
லீந்தான்
கல்லைதனில் உண்டுமிழ்ந்த ஊனமுதைக் கண்ணப்பன்
கனவிலீந்தான்
சொல்லிய தண்டலை யார்க்குக் கீரையுமாவடுவும் அன்று
தொண்டரீந்தார்
நல்லது கண்டாலும் அதை நாயனுக்கென்றவர் வீடு
நண்ணுவாரே,

பொழிப்புரை : இறைவனுக்காகத் தன் உடைமைகளை ஈந்த உத்தமர் வரிசையினை இவண் விளக்குகின்றார் ஆசிரியர். வரகுண பாண்டியன் வண்மைத் தன்மையினையும் வேடர் வேந்தன் கண்ணப்பன் ஊனமுது ஈன்ற கனிவுப் பண்பும், தண்டலையில் உறையும் அண்டர்நாயகனாம் அமலனுக்குக் கீரையும் மாவடுவும் ஈந்த தொண்டர் வரலாறும் இப்பாவில் வரிசைப் படுத்தப்படுகிறது. எத்தகு நல்ல பொருளினைக் காணினும் அது இறைவற்கு ஆம் என எண்ணி வாழ்பவர் வீடு பேறு எய்துவது திண்ணம் என்கிறார் ஆசிரியர்.

Those who were munificient in offering to Lord Siva what they have whether they are valuable or not will certainly reach the lotus feet of Almighty. In this line of Munificients Pandya King Varakuna Pandya the saint Kannappa, occupied important roll in sacrificing the valuables they possessed.

## விருந்தோம்பல் Hopitality

9. "திருவிருந்த தண்டலையார் வளநாட்டில் இல்வாழ்க்கை
செலுத்தும் நல்லோர்
ஒரு விருந்தாகிலும் இன்றியுண்டபகல் பகலாமோ?
உறவாய் வந்த
வெருவிருந்துக் குபசாரம் செய்தனுப்பின் பெரியோரென்
றுலகு கூறும்
வருவிருந்தொடு உண்பதல்லால் விருந்தில்லா வூண்சோறு
மருந்து தானே"

*பொழிப்புரை :-* எண்தோள் முக்கண் எம்மானாகிய தண்டலை ஈசர் உறையும் நாட்டில் வாழ்பவர் ஒரு பகலாவது விருந்தின்றி உண்டால் அது சிறந்த பகலாகாது. உறவாய் வரும் விருந்தினரை அமர்த்த நோக்கினராய் அன்பளாவும் இன் சொல்லினராய் வரவேற்று உணவருத்தி விருந்து புறந் தந்தால் அவர்கள் எல்லாச் சிறப்பும் எய்துவர். விருந்தோடு உண்ணாத உணவு மருந்தாய் மதிக்கப்படும் எனக் கூறுகின்றார் ஆசிரியர்.

Those who are not hospitable in inviting the guests and dining with them, they are not at all praised as worthy people. Those who feel happy in inviting the guests and giving them fine feast are praiseworthy people. The food even though rich in minerals and vitamins without guests will be treated as medicine.

## இனியவை கூறல் Speaking of sweets words

10. பொற்குடையும் பொற்றுகிலும் பொற்பணியுங்
கொடுப்பதென்ன பொருளோ வென்று
நற்கமல முக மலர்ந்தே உபகாரமிக்கே இன்சொலும்
நடந்தால் நன்றே
கற் கரையும் ஒளி பாகா ! தண்டலையார் வளர்நாட்டில்
கரும்பின் மேய்ந்த
சற் கரையின் பந்தலிலே தேன்மாரி பெய்துவிடுந் தன்மை
தானே"

*பொழிப்புரை* :- தன்னை அண்டினோர்க்குப் பொற்குடையும், பொன்னாடையும், பொன் அணியும் கொடுப்பதைவிட முக மலர்ந்து அவர்களை வரவேற்று இன்சொல் கூறுவதே சிறப்புடைத்து என்கிறார் ஆசிரியர். அவ்வாறு தன்னை அடைந்தோர்க்கு முக மலர்ந்து வரவேற்று இன்சொல் கூறும் செயல் கரும்பால் மேய்ந்த சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பெய்வதனை ஒக்கும் என்கிறார் ஆசிரியர்.

Oh Holy God ! What is the use of offering the golden umbre!la, dress and jewellery to the poor who come to us without speaking to them sweet words and deeds. With sweet words and sweet face one who invites the guest and this gesture is compared to honey raining in the sugar stretched pandal.

## செய்நன்றியறிதல் The feeling of indebtedness

11. குறும்பெண்ணாது உயர்ந்த நல்லோர் அறஞ்
சொன்னாலும் அதைக்குறிக்கொள்ளாமல்
வெறும் பெண்ணாசையிற் சுவை வேண்டும் ஞானம்
பொருந்தி உனைவேண்டேனந்தோ
உறும்பெண்ணார் ஒளியிடஞ்சேர் தண்டலை நீணெறியே
என்றுண்மை தேரில்
எறும்பெண்ணாயிரம் பால் கழுதையும் கைகடந்ததென்ன
வெண்ணந்தானே"

*பொழிப்புரை* : தண்டலைப் பதியின் தன்னேரில்லாத் தலைவ ! உயர்ந்தோர் அறம்பேணாது என் சிறு மதியால் அதனை இகழ்ந்து நின்னை வழிபடாது வாழ்ந்தேன், சிற்றின்பப் பெண்ணாசையிற்கிடந்து சுவைத்து மதி மயங்கி நின்னை மறந்தேன். இச்செயல் எறும்பும் கழுதையும் கை கடந்த செயலை ஒக்கும் என்கிறார் ஆசிரியர்.

Oh ! The head deity of Thandalai ! without adopting any moral code taught by elders, I had spent my early days in vain without any devotion to God. I was attracted by eve in my early days. This is the lamentati on of the author in this verse.

## நடுவுநிலை Being Justified

12. "துப்பிட்ட ஆல்விதை சிறிதாயினும் பெரிதாகும்
தோற்றம்போல்
செப்பிட்ட தினையளவு செய்தநன்றி பனையளவாய்ச்
சிறந்து தோன்றும்
கொப்பிட்ட உமைபாகா ! தண்டலையார் வளநாட்டில்
கொஞ்சமேனும்
உப்பிட்டபோர் கடமை உள்ளந்தனை நினைக்கும்
உலகந்தானே"

*பொழிப்புரை :-* ஆற்றல் மிகு ஆலம் விதை நுண்ணிதாய்ச் சிறிதாயிருப்பினும் பெருமரத்தை அது தோற்றுவிக்கும். தினையளவு சிறு உதவி செய்யினும் அது பனையளவாய் சிறந்து விளங்கும் உமைபங்கராகிய உமாமகேசா ! உலகில் உப்பிட்டோரை உள்ளளவும் மறவாது அனைவரும் நினைப்பர்.

Though the seed of banyan tree is small in size it will grow in a big, shady tree in due course. The small help like tiny grain 'ragi' rendered by one can be recollected as palmyra tree. Those who pour the salt in the food will be even green in memory by the world.

## அடக்கமுடைமை Calmness

13. "மோட்டுக்கே விதைத்த பயிர் வீணருக்கே செய்த நன்றி
மேயும் பட்டி
மாட்டுக்கே கொடுத்த விலை பரத்தையர்க்கே
தேடியிட்ட வண்மையெல்லாம்
பாட்டுக்கே அருள்புரிவார் தண்டலை சூழ்வீதிதோறும்
பறிந்திடாமல்
காட்டுக்கே எரித்த நிலா கானலுக்கே பெய்தமழை
சடுக்குந்தானே'

*பொழிப்புரை :-* மேட்டு நிலத்தில் விதைத்த வித்தும், தீயோருக்குச் செய்த உதவியும் பலரது நிலங்களிலும் பாது காப்பின்றி மேயும் பட்டி மாட்டுக்குக் கொடுத்த விலைப் பணமும் இருமனப் பெண்டிர்க்கு ஈந்த பெரும் பொருளும் காட்டில் எரித்த நிலாப் போலவும் கானலில் பெய்த மழை போலவும் பயன்படாது ஒழியும் என்கிறார் ஆசிரியர்.

Oh Merciful God ! You have presented the golden coins to the poets of devotional poems celebrated in praise of you. The seed sown in the barren upper land, the help rendered to worthless and down-trodden, the price offered to stray oxen the wealth spent for Dancing girls, are considered to be useless as the moonlight in the forest and the raining in the desert.

## ஒழுக்கமுடைமை Characterness

14. "தண்டலையா ரடிபணிந்து தவந்தானம் உபகாரம்
தருமம் செய்தே
கொண்ட பொருள் விலைவாசி காணிதேடிக் கோடி
கொடுப்பதல்லால்
வண்டரு மாயொன்று பத்துவிலை கூறி அநியாய வட்டி
வாங்கிக்
கண்டவர்தங் கடுஞ்செட்டுக் கண்ணையறக் கெடுக்குமது
கருமந்தானே"

*பொழிப்புரை :-* நீரும் நிலமுஞ் சூழ்ந்த தண்டலை யாரெனும் தலத்தில் அமர்ந்த தலைவனை வணங்கி வழிபட்டு இவ்வுலகில் தவம், தானம், உதவி, அறம் முதலியன செய்து உறையுளும் ஆடையும் தேடி வாழ்வாரே வாழ்வார். மற்று அறமல்லா வாழ்க்கை ஏற்று மிகுவட்டி பெற்று கடுஞ்செட்டு வாழ்க்கை மேற்கொண்டோர் கண்கெட்டுக் குருடராய் அவதி யுறுவர் என ஆசிரியர் கூறுகின்றார்.

Those who lead the pious life, not forgetting the lotus feet of the God, are the living people in true sense. Those who lead their lives in avarice, extracting high interest from others and sell their things in exorbitant prices will certainly become blind & worthless in due course.

**பிறனில் விழையாமை** Not falling in love with other's wife

15. சங்கையறப் படித்தாலும் கேட்டாலும் பிறர்க்கு
உதவிகளைச் சொன்னாலும்
அங்கணுலகிற் சிறியோர் தாம் அடங்கி நடந்தே கதியை
அறியமாட்டார்.
திங்களணி சடையாரே தண்டலையாரே சொன்னேன்
சிறிது காலங்
கங்கையிலே படிந்தாலும் பேய்ச் சுரைக்காய் நல்ல
சுரைக்காயாகாதே''

(பொழிப்புரை) ஐயந்திரிபறக் கற்றாலும், கற்ற சான்றோர் வாய்க் கேட்டாலும், பிறர்க்கு உறுதி பயக்கும் மொழிகளை உரைத்தாலும் கயவர்கள் ஒழுங்காக அடங்கி வாழ மாட்டார்கள். மாசறு மதியம் சடையிற் சூடிய தண்டலையாராகிய அழல்நிறமேனி அம்மானே! பேய்ச் சுரைக்காய் சின்னாட்கள் கங்கையின் புனித நீரில் மூழ்கினாலும் நல்ல பால் சுரைக்காயாகும் பான்மையுண்டோ? என ஆசிரியர் வினவுகின்றார்.

In spite of being the readers of religious scripturies, listeners to expositions by men of ripe wisdom and rare experiences and the preacher of moral codes of virtual life, the lofers and down-trodden won't be submissive to elders and superiors. Oh God the Almighty! The pumpkins though it has got some dip in the sacred river Ganges, it won't change the orignial quality not becoming the nice vegetable.

**பொறையுடைமை** Patience

16. உழையிட்ட விளிமடவாருறவு விட்டு வெகுளி விட்டு
உலக வாழ்வில்
பிழைவிட்டும் இன்ன மின்னம் ஆசை விடாமற் கழியப்
பெற்றே னன்றோ
தழையிட்ட கொன்றை புனை தண்டலை நீ ணெறியாரே
யென் தன்மை யெல்லாம்
மழைவிட்டுந் தூவானம் விட்டதில்லையால் இருந்த
வண்ணந் தானே"

(பொழிப்புரை) எழில் மிக்க ஏந்திழையாரின் காதல் பிணிப்பினீங்கியும், வெகுளியினை அறவே ஒழித்தும், எப் பிழையினையும் செய்யாது நீக்கி வாழ்ந்தாலும் இன்னும் ஆசை மட்டும் விட்டபாடில்லை. கொன்றைமாலை தரித்த பெருமானே! என் இத் தன்மையினை ஆய்ந்தால் மழை விட்டும் தூவானம் விடவில்லை என்ற பழமொழிக்கு இலக்காக ஆகியுள்ளதாக அறிகின்றேன் என ஆசிரியர் கூறுகின்றார்.

Although the love with beautiful maiden, the anger and the blunders in the worldly life were abandoned by me still I am not at all free from cares and wishes. Oh My God with garland of beautiful Yellow flowers ! Though it stopped raining still the driciling is occurred. The above proverb is used by the author to compare the action quoted above.

**அழுக்காறுமை** Non Jealousy

17. "கொச்சையில் பிள்ளைக்குதவும் தண்டலையார்
வளநாட்டில் கொடிய தீயோர்
வச்சிரப்பிள்ளைக்கும் உன்மா தவனே புத்தி சொன்னான்
வகையுஞ் சொன்னான்
அச்சுதப்பிள்ளைக்கும் உரை ஆண்டவனே புத்தி
சொன்னான் ஆகையாலே
துச்சினப் பிள்ளைக்கு உளரார் புத்தி சொல்லுவா
ரெனவுஞ் சொல்லலாமே',

*பொழிப்புரை :-* இறைவன் உலகில் உள்ள அனைவருக்கும் அருளும் அருளாளரராவார். இறைவன் தன் மக்களாகிய உலக உயிர்கட்கு அறிவுரையும் ஆக்கவுரையும் வழங்கி அவர்களை உய்விக்கின்ருன் என ஆசிரியர் இப்பாடலில் விளக்குகின்றார்.

The Merciful God being always helpful to the young ones who are faultless, the innocent and others without any defects advise in the proper way to the needy in proper time.

## வெஃகாமை Not liking to have others wealth

18. "சுருத்த விடமுண்டருளுந் தண்டலையார் வளநாட்டில்
கடிய தீயோர்
குரித்த மனையாள் அரையில் துயிலுரிய ஐவர்மனம்
கோபித்தாரோ
பரித்துரிமைப் பொருள் முழுதும் பறித்தாலும்
கவர்ந்தாலும் பழிசெய்தாலும்
பொருத்த வரேஅரசாள் வார் பொங்கினுர் காடுறைந்து
போவர் தாமே"

*பொழிப்புரை :-* நஞ்சுண்டும் இறவா நம்பனாகிய இறைவன் குடியமரும் இந்நாட்டில் தீயோர்கள் பாண்டவர் ஐவரின் அகமுடையாளாகிய திரௌபதையின் துகிலுரியும் போது ஐவரும் அமைதிகாத்தனர் பாண்டவர்களது உரிமைப் பொருளைக் கௌரவர்கள் கவர்ந்தாலும் காலம் வரும் வரைக் காத்திருந்தனர் ஆகலின் பொறுத்தாரே பூமியாள்வார் பொங்கினார் காடாள்வார் என்ற பழமொழிக்கு இலக்கானார்கள் என்கிறார் ஆசிரியர்.

Oh God of Thandalai ! Gauravas, the wicked people, narrated in Mahabaratham undressed Throupathai, the wife of Pandavas in the midst of royal monarchs and in the

immediate presence of Pandavas. In spite of it they never lost their temper and were patient as silent spectator of the scene. Therefore the people with patience will rule over the country and those who are rebels will be forced to settle down at forest.

### ‘புறங்கூறாமை’ Not Back - Biting - never talk ill of others

19. “அள்ளித் தண்ணீ ரணியுந் தண்டலையார் வளநாட்டில்
ஆண்மையுள்ளோர்
விள்ளத்தகு கல்வி யுள்ளோர் செல்வமுள்ளோர்
குடையோர் மேன்மை நோக்கி
உள்ளத்தில் அழன்றழன்று நமக்கில்லையென
வுரைப்போர் உலகமெல்லாம்
பின்னை பெற்றோர் தமைப் பார்த்துப் பெருமூச்சு
விட்டதொரு பெற்றிதாமே”

பொழிப்புரை :- தண்டலைப் பெருமானே! ஆண்மையுள்ளோரும் கல்வியுள்ளோரும் பெரும் பொருள் படைத்தோரும் ஆகிய இத்தகையோரைக் கண்டு உள்ளத்தே அழுக்காறு கொண்டு நமக்கில்லையே இத்தகைய வளம் என்று அழன்று உரைப்போர் செயல் பிள்ளை பெற்றோரைக் கண்டு அப்பேறில்லாப் பேதையர் பெருமூச்சு எறிந்த பெற்றித்தாம் என்கிறார் ஆசிரியர்.

Oh Lord! Those who are jealous towards the valiants, educationists and wealthiest are compared to the people with no issues towards the people with children in having the feeling of sighs with sorrow.

### பயனில சொல்லாமை Not Talking of useless words

20. “மண்ணுலகாளவும் நினைப்பார் பிறர் பொருள் மேல்
ஆசைவைப்பார் வலிமை செய்வார்
புண்ணியமென்பது செய்யார் இம்முறையினாட் கழித்துப்
புரண்டு போவரார்

பண்ணுலவும் ஒளிபாகா ! தண்டலையார் வகுத்த
விதிப்படி யல்லால்
எண்ணமெல்லாம் பொய்யாகும் எளிதாமே மெய்யாவது
இயற்கையாமே"

*பொழிப்புரை :-* உலகினை ஆளவும் எண்ணுவார்கள். பிறர் பொருளை நச்சுவர். வல்லாண்மை பேசுவார். யாருக்கும் எவ்வித உதவியும் செய்யார். இவ்வாறு அவமே நாளைப் போக்கி வாழ்நாளைக் கழிப்பார்கள் வீணர்கள். இறைவன் வகுத்த விதிப்படியன்றி வேறு வழியில் உலகியல் நிகழாதென அறிக என ஆசிரியர் கூறுகிறார்.

Those who wish to rule over the earth, get the wealth of others in a foul play and boast their brutal actions will meet with decay as they did not do any munificence to others. The order of world lies with Almighty.

## தீவினையச்சம் Afraid of destiny

21. "சொன்னதைச் சொல்லுமிளங் கிள்ளையென்பார்
தண்டலையார் தொண்டு பேணி
இன்னதுக்கு இன்னதென்று பகுத்தறிவொன்றில்லாத
ஈன ரெல்லாம்
தன்னகத்தே கண்டவுடன் முறைபேசிக் காணாமல் சாடை
பேசி
முன்னுகொன்றாய் நடப்பர் பின்னுக்கொன்றாய் நடந்து
ஒழிவர் தாமே"

*பொழிப்புரை .-* கூறியது கூறும் இளங்கிள்ளையைப் போல் பிறர் உபதேசித்துப் பேசும், தனக்கென்று ஆற்றலில்லாப் பகுத்துணராக் கயவர்கள் பிறர்முன் நயந்தும், புகழ்ந்தும் பேசிப் பின் அகன்ற பின்னர் அவரையே இழித்தும், பழித்தும் பேசி அவமே காலங்கழிப்பர் என்கிறார். இப்பாடலின் வாயிலாய் ஆசிரியர்.

* குறிப்பு இப்பாடல் புறங்கூறல் என்ற தலைப்பில் அமைதல் வேண்டும். தவறாக ஏட்டில் ‘தீவினையச்சம்’ என இடம் பெற்றுள்ளது. இதனைப் போலவே 20ம் பாடல் ‘தீவினையச்சம்’ என்ற தலைப்பில் அமைந்திருக்கவேண்டும். அவண் ‘புறங்கூறல்’ என்ற தலைப்பு பாடல் செய்திக்குப் புறம்பாக உள்ளது.

Those who are parrot in speech won't be able to find out the good and bad. They will praise the people in their presence and speak ill of them as they are away. They lead lives lowering their status.

## ஒப்புரவறிதல் Knowing the worldly manner

22. “கொடியருக்கு நல்லபுத்தி சொன்னாலும் வாராது
கொடையில்லாத
மடையருக்கு மதுரகவி யுரைத்தாலு மவர் கொடுக்க
மாட்டார் கண்டீர்
படியளக்குந் தண்டலை நீணெறியாரே கருணை செய்வார்
பருவ நாளில்
விடிய மட்டும் மழைபெயினும் தெரு வொட்டாங்கிழிஞ்சி
விரைத்திடாதே”

*பொழிப்புரை* :- கொடியோருக்குக் கூறும் நல்லறிவும், கொடையில்லாத மடையருக்குக் கூறும் மதுரகவியும் பயன் படாது. தீயோர் யாருக்கும் ஈயமாட்டார்கள். இறைவா! மழைநாளில் விடியளவும் மழை பெய்தாலும் தேங்காய் ஓடு (கொட்டாங்குச்சி என வழங்குவர்) முளைக்காது என்பர் உலகோர் என ஆசிரியர் நயம்பட உவமை வாயிலாக விளக்கு கின்றார் இப்பாடலில்.

The advice to worthless, the sweet verse to wicked miser won't be useful. Similarly during monsoon though it rained torrentially throughout the day and night the shell of the coconut won't sprout

## ஈகை Charity

23. செங்காவி மலர்த் தடஞ் சூழ்தண்டலை நீணெறி கருணை சிறிதுண்டாகி
எங்காகிலென் னவரெண்ணிய தெல்லாம் முடியுமில்லை யாகில்
பொங்கொளி சூழ் உலகிலுள்ளங்கால் வெள்ளெலும் பாய்ப்போகினாலும்
ஐங்காதம் போனாலும் தன்பாவந் தன்னுடனே ஆகுந்தானே"

பொழிப்புரை:- மலர்ப்பொய்கை நிறைந்த நன்செயும், பொதும்பரும் சூழ்ந்த தண்டலை நீணெறியாராகிய பெம்மான் அருள் பெற்றால் யாவரும் எண்ணிய எண்ணியாங்கு இனிதே எய்தப் பெறுவர். அவ்வாறு பெறாதார் உலகில் உள்ளங்கால் வெள்ளை எலும்பாய்த் தேய்ந்தாலும் ஐங்காத தூரம் அகன்று செல்லினும் தன் பாவம் தன்னுடனே வந்தே சேரும் என்கிறார் ஆசிரியர்.

Those who are blessed by the Almighty, Lord Siva of Thandalai. will succeed in their attempts as they wish. Those who are not will meet with utter failure in all walks of life.

## புகழ் Fame

24. தாயறிவாள் மகவறுமை தந்தையுந் தானறிவானோ தருமந்தானே
வாய்மையுடன் தூது சென்ற தண்டலை நீணெறியாரே மனிதரெனும்
பேயறிவு முழுமூடர் தமிழருமை யறிவாரோ பேசுவாரோ
நாயறியா தொரு சந்திப்பானை என்றும் சட்டியென்னும் நியாயந்தானே"

(பொழிப்புரை) மக்களின் வறுமை நிலையினைத் தாய் மட்டுமே உணர்வாள். அவ்வளவாகத் தந்தை அறிந்து கொள்ள மாட்டார். இது உலகியற்கை. சுந்தரர்பால் தூது

சென்ற பெம்மானே ! பேயறிவும், மூடத்தன்மையும் உடைய மக்கள் தமிழ் மொழியின் சுவையினை அறிவார்களோ ? நாயறியா சந்திப்பானை என்று கூறும் பழமொழி இதனாலன்றோ என விளக்குகின்றார் ஆசிரியர்.

Oh God ! you undertook the mediation work for Sundarar in the night. The wicked people won't be able to know the sweetness of our language 'Thamizh'. The mother only knows the povertiness of her young ones whereas the father is ignorant of it. The proverb is prevailing as the dog is ignorant of pot which is placed at the Junction of four streets.

### அருளுடைமை Being tenderness

25. "கட்டிய மாங்கனி வாழைக்கனி பலவின் கனிகள்
உபகாரமாகும்
சிட்டருக்கே அவர்தேடும் பொருளையெல்லாம்
இரப்பவர்க்கே செலுத்தி வாழ்வார்
மட்டுலவுஞ் சடையாரே தண்டலை நீணெறியாரே
வனங்கள் தோறும்
எட்டிமரம் பழுத்தாலும் ஈயாதான் வாழ்ந்தாலும்
என்னதானே"

பொழிப்புரை :- பூம்பொழிலில் பழுத்த வாழை, மா, பலா முதலிய முக்கனிகளும் பிறர்க்கு உபகாரமாய் விருந்தாய் அமையும். அதுபோலத் தாம் ஈட்டிய பொருளனைத்தையும் இரக்கும் பிறருக்கே கொடுத்து வாழ்பவர்கள் உயர்ந்தோர் ஆவர். மேலும் அவர்களே அருளுடையராகவும் கருதப்படுவர். பிறையும் சடையும் பெற்ற பிஞ்ஞகளே ! வனந்தோறும் எட்டி மரம் பழுத்தாலென்ன பயன் ? அதுபோல் ஈயாத உலோபி வாழ்ந்தாலும் பிறர்க்கும் சமுதாயத்திற்கும் யாது பயன் ? என வினவுகின்றார் ஆசிரியர்.

The fruits of Plantain. Mango and Jack tress are useful to others in the feast. Similarly the municificent people will

spend all they acquire for the benefit of the poor and beggars. What is the use of the poisonous fruits of the forest? Similarly what is the use of miser being prosperous who does not like to give anything to others as alms.

## புகழ் Fame

26. "ஓதரிய தண்டலையா ரடிபணிந்து நல்லவரென் றுலக
மெல்லாம்
போதமிகு பொருளுடனே புகழ் படைத்து வாழ்பவனே
புருடனல்லால்
ஈதலுடனிருக்க மன்றில் பொன்காத்த பூதமென
விருந்தா லென்ன
காதவழிப் பேரில்லான் கழுதையோ டொக்குமெனக்
காணலாமே"

குறிப்பு : இப்பாடலில் தலைப்பாகப் 'புலால் மறுத்தல்' என உள்ளது. ஆனால் செய்தியினை நோக்க 'புகழ்' என இருத்தல் வேண்டும் என அறிந்து 'புகழ்' எனத் தலைப்பிட்டுள்ளேன்.

*பொழிப்புரை* :- பேசுதற்கரிய பெம்மான் தண்டலையார் திருவடிகளைப் பணிந்து 'நல்லவர்' என்று உலகமெல்லாம் புகழ பிறர்க்கு ஈந்து வாழ்பவனே புருடோத்தமன் ஆவான். மற்ற ஈயாத உலோபிகள் எல்லாம் பொன்காத்த பூதமாய் விளங்குகின்றனர். காதவழியளவாவது பெயரும், புகழும் பெறாதவன் கழுதையென அழைக்கப்படுவான் இக்காலத்தில் என ஆசிரியர் புகழுடையான் சிறப்பினையும், புகழில்லான் இகழ்ச்சியினையும் கூறுகின்றார்.

The man with fame and name and virtual character such as munificence is valued as true man among men. Those who are not will be called upon as demon guarding golden treasure. The man w!thout popularity and farmliarity to the people of 10 miles radius will be treated as donkey.

## தவம் Deep Meditation

27.. "பரியாம விடுஞ்சோறும் ஊமை கண்ட கனவும் ஒன்றும்
பரிசிலீயார்
அரிதான செந்தமிழுக் கருள் சிறிதுமில்லாது
ஒன்றாகுமோ தான்
கரிகாலன் பூசைபுரி தண்டலை நீணெரியாரே கதித்த
வோசை
தெரியாத செவிடன் காதினிற் சங்கு பூரித்தேன்
செப்பலாமே"

பொழிப்புரை ;: அன்பிலாது பிறர்க்கு அளிக்கும் அமுதும், ஊமையன் கண்ட கனவும் தேமதுரத் தமிழ்க் கவிக்கு மனம் இசைந்து பரிசிலீயாத வன்கண்மையும், ஒரு பான்மையன. பேரரசன் கரிகாலன் வழிபட்ட கண்ணுதலோய்! தண்டலைப் பதியமர்ந்த முக்கண்ணாய்! ஒலியறியாச் செவிடன் காதில் ஊதிய சங்கொலிஒக்கும் இச் செயல் என ஏசிப் பேசுகின்றார் ஆசிரியர்.

Oh Almighty of Thandalai Thou hath been worshipped by karikalan the great. The rice offered without kindnees, the dream of the dumb, the man without being moved by the sweet Tamil verse are alike. This state of affair is conpared to the sound of the conch into the ear of the deaf.

## 'கூடாவொழுக்கம்' Indesirable Character

28. "முன்னரிய முறைவணங்கித் தண்டலையா ராகமத்தின்
மொழி கேளாமல்
பின்னமறக் கொன்றவனும் குறைத்தவனும் விற்றவனும்
பெற்றுளோனும்
அன்னெறியே சமைத்தவனும் உண்டவனும் நரகுறுவர்
ஆதலாலே
தன்னுயிர் போலெண்ணாது மன்னுயிருக் கிரங்குவது
தக்க தாமோ"

பொழிப்புரை :- தண்டலைப் பதியின் தலைவனை வணங்கி அவன் அறநூலாகிய ஆகமவிதிப்படி ஒழுகாது பிற உயிர்களைக் கொன்று அதனுடலைக் குறைத்தவனும், பின் அப்புலாலை விற்றவனும், அதனைப் பெற்று உணவாக உண்டு சுவைத்தவனும், அவ்வாறே சமைத்தவனும், உண்டவனும் நரகப்படுகுழியில் ஆழ்வர். தன்னுயிர் போல் மன்னுயிரையும் காக்க வேண்டுமல்லவா ? அவ்வாறு எண்ணாது மன்னுயிர்க்கு மனமிரங்குவது எற்றிற்கு என வினவுகின்றார் ஆசிரியர்.

Ethical Codes and literatures emphasis that one should avoid the meat eating (i. e.) (flesh of the beast). If he does not follow the guidelines of the scriptures to avoid such practice he will certainly reach the hell for his sins he committed during his life time.

## கள்ளாமை 'Not doing theft'

29. "காதிலே திருவேடம் கையிலே செபமாலை
கழுத்தும் மார்பும்
மீதிலே தாவடங்கள் மனதிலே கரவேடம் வேடனாமம்
வாதிலே பயன்தேடு தண்டலை நீணெறியாரே
மனிதர்காணும்
போதிலே மவுனமுமாய் பொழுதுசாயில்
உருத்திராட்சப் பூனைதானே"

பொழிப்புரை :- காதிலே குண்டலமும், கையிலே ஜெப மாலையும் கழுத்திலும், மார்பிலும் பெரிய தாழ்வட மணி களும் மனத்திலே கரவும் வைத்திருந்தானேயாகில் அவன் வழிபாடும், வேடமும் பயன்தராதவையாகும். பொக்கமிக்கவர் பூவும், நீரும் கண்டு நக்கு நிற்கும் நம்பன் தண்டலையார் என எண்ணிப் புறவேடம் களைந்து உள்ளன்புடன் இறைவனைப் போற்றவேண்டும் என்கிறார் ஆசிரியர். பகலில் மவுனமா யிருந்து இரவில் உருத்திராட்சப் பூனையாய் விளங்கும் பொய் வேடதாரிகளைக் கண்டு கரவுடைய நெஞ்சத்தார்க்கு அரியன் இறைவன் என விளக்குகின்றார் ஆசிரியர்.

Without pure heart even if he wears the sacred saffron robe and rosary in the hand, offers his prayers before the Lord, what is the use of it ? The merciful and powerful God won't be visible to those who are dirt in words and deeds.

## வாய்மை Truthfulness

30. "உருவெடுத்த நாள் முதலாய் ஒருசாணின் வயிறு
வளர்த்து உழல்வதல்லால்
மருவெடுத்து நின்பாதமலர்தேடி நின்பணிய
மாட்டே னென்றோர்
திருவிருக்கும் மணிமாடத் தண்டலை நீணெறியாயென்
செய்தியெல்லாம்
சருகரிக்க நேரமன்றிக் குளிர்காய நேரமில்லாத்
தன்மை தானே"

*பொழிப்புரை* :- கருவுற்ற நாள் முதலாக நின் பாதமே காண்பதற்கு எண்ணாது அவமே வயிற்றின் பொருட்டே வாழும் என் நிலை எதனைப்போல உள்ளது என ஆராய்ந்தால் சரு கரிக்க நேரமுள்ளதேயன்றி அதனை நெருப்பிட்டுக் கொளுத்தி அதன் வெம்மையினால் நான் குளிர் காய இயலாத் தன்மை போல உள்ளது என்கிறார் ஆசிரியர்.

From the birth I have no time to think of you Oh Mighty God! but I am always in search of means for my stomach. This is compared to the action of a man who gathers the dried leaves without being driven away from cold from the fire made out of it.

## வெகுளாமை Not being angry

31. மானென்று வடிவெடுத்த மாரீசன் போய் மறைந்தான்
மானைவென்று
தேனென்னும் ஒளிச்சீதை சிறையிருந்த தால் சீதை
தன்னைத் திருடி வென்றான்

வானென்று மாசினந்தான் தண்டலையார் திருவுளத்தின்
மகிமையாலே
தானொன்று நினைக்கலுமே தெய்வமொன்று
நினைத்ததுவுஞ் சரகசந்தானே"

பொழிப்புரை :- பொன்மான் உருவெடுத்த மாரீசன் மாயச் செயலால் அழிந்தொழிந்தான். மான் போன்ற தேனொத்த சொல்லாள் சீதையினை அரக்கன் இராவணன் களவால் சிறையெடுத்தான். மிகு சினத்தால் அழிவையும், எதிர்கொண்டான். நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைப்பது இயற்கை தானே என்கிறார் ஆசிரியர்.

Mareesan, the demon King in disguise of golden deer deceived Sita the consort of Sri Rama and died at the sharp arrow of Sri Rama. Ravana, the demon emperor kidnapped Sita in disguise of a beggar This action is compared to a well known proverb. 'Man proposes and God disposes'.

## இன்னாசெய்யாமை Not doing harm

32. "கை சொல்லும் வளங்காட்டு மகளிற்குரிய
தண்டலையைக் காணார்போல
பொய் சொல்லும் வாயினர்க்குப் போசனமும் கிடையாது
பொருள் நில்லாது
மை சொல்லுங் காரளிக்குந் தாழைமலர் பொய்
சொல்லி வாழ்ந்ததுண்டோ ?
மெய்சொல்லி வாழாதான் பொய்சொல்லி வாழ்வதில்லை
மெய்யதாமே"

பொழிப்புரை :- உலகில் பொய் சொல்லி வாழும் பேதையர்க்குப் போசனம் கிடைக்காது.அதனைப் போலவே அவர்கள் சேர்த்து வைத்த பொருளும் நில்லாது அழியும். தாழைமலர் பொய்க்கரி கூறிய காரணத்தினால் இறைவர்க்கணியும் பெரும் பேறு பெறவில்லை. வாழ்வாங்கு வாழ்பவன் உண்மை கூறி வாழ வேண்டுமேயன்றி பொய் கூறி வாழ இயலாது. என்கிறார் ஆசிரியர்.

The liers won't get their routine diet or any food when they are hungry. The acquired wealth will soon disappear. Therefore man without lies will become prosperous in life.

## கொல்லாமை Not Slaughtering

33. "அந்தணரைப் பெரியோரைப் பரமசிவனடியாரை
அகந்தையாக
நிந்தனை செய்தாலு மென்ன வைதாலு மென்ன
அதில் நிகழ்வதாமோ
சுந்தரற்குத் தூதுசென்ற தண்டலை நீணெறியாரே
துலங்கும் பூரணச்
சந்திரனைப் பார்த்து நின்று நாய்குலைத்தாற் போலு
மென்ன தாட்சிதானே"

பொழிப்புரை :- செந்தண்மை பூண்டொழுகும் அறவோராகிய அந்தணரையும், மூத்தோரையும், சீல மிக்க சிவனடியார்களையும் அகந்தையுடன் எண்ணி இகழ்ந்து பழிப்புரை கூறினாலும், வைதாலும் அதனால் என்ன பயன் ? செந்தமிழ் பாடிய சுந்தரர்க்குத் தூது சென்ற பிறையணியும் பெருமானே ! முழு நிலவினைக் கண்டு நாய் குரைத்தால் பயன் என ? என வியப்புடன் வினவுகின்றார் ஆசிரியர்.

The people of virtual character, elders & the devotees of Lord Siva won't be treated badly and abused Cruelly. Whether they are treated well or not they won't be upset. Oh God ! You were employed as emissary for Sundaramurthi Nayanar at Thiruvarur. What is the use of barking the dogs seeing the Full moon of the sky.

## நிலையாமை Mortality

34. "கோடாமல் பெரியவர் போல் நடப்பதன்றிக்
குற்றமுடன் குறை செய்தோர்கள்
ஆடாகிக் கிடந்த விடத்தினில் மயிருங்கிடவா மலழிந்து
போவார்

வீடாகிக் கதியுதவுந் தண்டலையாரே சொன்னேன்
மெய்யோ பொய்யோ

கோடாலிக் காம்பு நெடுங்குலத்துக்கே கேடான
கொள்கை தானே''

*பொழிப்புரை* :- நடுவுநிலைப் பண்பிலிருந்து சிறிதும் மாறுபடாமல், பெரியவர்களைப் போல ஒழுகாமல் குறையும், குற்றமும் கொண்டு வாழ்பவர்கள் ஆடு போல் அழிந்து போவார்கள். மேலும் அவர்கள் குலத்தைக் கெடுக்கும் கோடாரிக்காம்பாகக் கருதப்படுபவர் என்கிறார் ஆசிரியர்.

Oh God of Thandalai, a hamlet of Thanjavur Dt Those who behave without adopting the virtual characters and doing harm to others would be cursed as sheep and attain the end without any fruitful esult. This is briefly described by the proverb 'Like the axe which hits the fame of the family'

## தெய்வச் சாயல் Divine Shade

35. இறந்தனை இத்தனை நாளும் மறந்துனை நானின்
றலைந்தே னினிமேல் என்னாம்

கரந்தை மதிச்சடைக் கணிந்த தண்டலை நீணெரியாரே
காப்பாரென்றும்

உரந்தனை வைத்திருந்தவரும் உள்ளதெல்லாம் உண்டு
சும்மா வுலகந்தன்னில்

மரந்தனை வைத்திருந்தவரும் வாடாமல் தண்ணீரும்
வார்ப்பார் தாமே'

*பொழிப்புரை* :- இறைவா ! நின்புகழினைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளாகும் எனக்கு. இதுவரை நின்னை வழிபடாது இறந்தவனாகவே காலங்கழித்துவிட்டேன். மதி பணிந்த சடைமுடியாய் ! தண்டலை நீணெரியாரே! இனி நீரே காப்பீர் என எண்ணி நின்பாத மலர்களைப் பற்றி விட்டேன். மரம் வைத்தவர் தண்ணீர் ஊற்றுவார் என்ற உலகியல் வழக்கு நிலவுகின்றதல்லவா என ஆசிரியர் வியந்து உரைக்கின்றார்.

The Days spent without offering prayers are treated as waste and dead. Hereafter I won't forget you. I surrender and prostrate before you unconditionally. It is the duty of yours to safeguard me from committing sins. The man who plants the tree pours the water also.

36. "முரசியம்ப மறை முழங்குந் தண்டலையார் ஆகமத்தின்
உரை கேளாமல்

தரை சிறந்து தூருமதுவாளுந் தேனெடுத்த கதை
தள்ளப்போமோ ?

உரை பயின்ற நீதியொடுங் கொல்லாமல் கொன்றவனை
யுடனே சீறி

அரசனன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லுவதே
அழகுதானே"

பொழிப்புரை :- மறைதேடும் பாதேவன் உரை கேளாது மறவழியில் நின்று அழிந்தோர் முன்னரும் பலருளர். நீதியொடு நெடுந்தருமநெறி நில்லா மக்களை அரசு அன்றே சொல்லும் தெய்வம் நின்றே கொல்லும் என ஆசிரியர் அழுத்தமாக அறம் கூறுகிறார்.

Men in general lured by meterial objects to which they get attached strongly and those never heed the advice rigidly set apart by the scriptures find themselves in decay. The man not adhearing the moral code and conduct will be punished by the ruler at once while the merciful God sees but waits.

37. "சிறுபிறை துன்றிய சடையார் தண்டலையார் பொன்னி
வளம் செழித்த நாட்டில்

குறைவுறவே பெருவாழ்வு மைந்தரும் மக்களும்
பொருளாய்க் குறித்திட்டாரே

முறை பயில் பத்திரகிரியும் பட்டினத்து பிள்ளையுஞ்சேர்
முன்றமையாலே
துறவறமே பெரிதாகும் துறவிக்கு வேந்தனும் துரும்பு
தானே"

*பொழிப்புரை :-* மாசறு திங்கள் சூடிய சென்னியராகிய தண்டலைப் பதியுள் அமர்ந்த அண்டர் நாயகன் உறையும் பொன்னிசூழ்நன்னாட்டில் மக்களைப்பெற்று மனையறம் காத்துப் பெருவாழ்வு எய்தியவரே சிறப்புறு மக்களாகக் கருதப்படுவர். பத்திரகிரியாரும், பட்டினத்தாரும் ஒன்று சேர்ந்த முறைமையாலே இல்லறத்தினும் துறவறமே பெரிதாகும். மேலும் துறவிக்கு வேந்தன் துரும்பாக எண்ணப்படுவான் என ஆசிரியர் துறவின் பெருமையினை அருமையாக விளக்கு கின்றார்.

In the wordly sense one can be praised provided he has possessed the Wealth of Children. Patharakiri and saint Pattinathar were unitedly blessed by Lord Mahalinga at Thiruvidaimaruthur. Therefore the austerity is considered above all ways. Besides, the austere will treat even the rulers of earth as a straw.

38. பேரிசை சூழ் சுற்றமுடன் மைந்தரும் மாதரும் சூழப்
பிரபஞ்சத்தே
பாரிடத்திலிருந்தாலும் திருநீற்றுக் களக்கொடிபோல்
பற்றில்லாமல்
சீரிசைக்குந் தண்டலையார் அஞ்செழுத்தை நினைக்கில்
முத்தி சேர்தலாலே
ஆரியக் கூத்தாடுகினும் காரியமே கண்ணாவர் அறிவர்
தானே"

*பொழிப்புரை :-* உலகில் இசைமிக்க இல்வாழ்வுடையார் மக்களோடும் உற்றார் உறவினரோடும் பற்றியும், பற்றாமலும் தண்டலைப் பெருமானின் தண்ணடிகளை எண்ணி 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை நினைத்து வாழ்பவர்

எண்ணிய எண்ணியாங்கு வீடுபேற்றினை எய்தப் பெறுவர். இச்செயல் ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருக்கும் செயலை ஒக்கும் என ஆசிரியர் அழகிய உவமை வாயிலாகவும், பழமொழி வாயிலாகவும் உணர்த்திக் காட்டுகின்றார்.

If one surrounded by his kith and kin in earthly life and leads a pious life meditating the 'Panchatchara', he will reach the heavenly abode without any hesitation. Though while jugglers dancing attend their duties properly. This is the proverb known by everybody of Tamil nadu.

39. "ஓதரிய வித்தை வந்தா லுரிய சபைக் கழகாகும் உலகிலார்க்கும்
ஈதலுடன் இரக்க வந்தா லினிய குணங்களுக் கழாயிருப்ப தன்றோ
நீதி பயில் தண்டலையார் திருநீறு மெய்யழகாய் நிறைந்து தோன்றும்
காதினுக்கே கடுக்கன் இட்டால் முகத்தினுக்கே அழகாகும் காண்கதானே"

பொழிப்புரை :- ஆழ்ந்த கல்வி மிக்கோர் அமர்ந்தால் அந்த அவை அழகு பெறும். இரப்போர்க்கு ஈயும் இனிய பண்பு, நற்பண்புகட்கெல்லாம் தலையாயதாயும், அழகு மிக்கதாயும் இருக்கும். தண்டலைப் பெருமானின் தண்ணளி மிக்க திருநீறு, பூசியோர் மெய்யழகினைப் பூரிக்கச் செய்யும். கர்தணியாகிய கடுக்கன் அணிந்தால் அது காதிற்கு மட்டும் அழகினைத் தராமல் முகத்திற்கும் அழகு தருவதனை உலகியல் நீதிகொண்டு உணர்த்துகின்றார் ஆசிரியர்.

The academy of learned will be becautified only by the presence of versatile learned gentlemen. Being munificent will be considered to be the best quality. Applying the sacred ash of Lord Thandalaiyar in the forehend adds the beautification, like Ear ring gives the beauty not only to ear but also to the face.

40. "பாரறிய அண்ணாவி கவிராசர் புலவரென்று பாட்டுஞ்
சொல்வார்
சீரறியார் தளையறியார் பல்லக் கேறுவர் புலமை
செலுத்திக் கொள்வார்
ஆரணியுந் தண்டலை நீணெரியாரே இலக்கண
நூலறியா ரேனுங்
காரிகை யாயினுங் கற்று கவிதை சொல்ல வெறிகொண்ட
கயவர் தானே"

*பொழிப்புரை* :- சீரும் தளையும் சிறிதேனு மறியாது புலவரெனவும், கவிஞர் எனவும் பலர் தருக்கித் திரிவர் உலகில். இவ்வாறு இலக்கண அறிவு சிறிதுமின்றி புகழ் அடைய விரும்புவர் சிலர். ஆகலின் இக்கயவர்கள் காரிகை கூற்றுக் கவிதை பாடும் வெறி உணர்வினை எய்திய சிறியோர் ஆவர் என ஆசிரியர் இகழ்ந்துரைக்கின்றார்.

One who boasts himself as poet and learned without sufficient scholarship in grammar must atleast learn 'Karigai' the fundamental grammar for verses and compose verse with that meagre knowledge.

41. கொச்சையிலே பாலுண்டோ ? கூத்தியர்கள்
தன்னிடத்தில் குணமுண்டாமோ?
துச்சரிடத் தறிவுண்டோ ? துச்சரெங்கே போனாலும்
துரையாவாரோ ?
நச்சரவு தொடையணிந்த தண்டலை நீணெரியாய்
இந்நாடுடனேல்லால்
அச்சியிலே போனாலும் அகப்பை ஒரு காசு விலை
யாகுந்தானே"

*பொழிப்புரை* :- கறவையில் பால் பெறலாமேயன்றிக் கொச்சையில் பால் பெற இயலாது. தேனுண்டு துறக்கும் வண்டு போன்ற வாழ்வினராய இருமனப் பெண்டிர்பால் நற்குணம் காண இயலுமோ ? தீயோர் நல்லறிவு பெற்று நாடு போற்றும் நல்லோர் ஆவார்களா ? மோட்டரவின் தொடை

யணிந்த முப்புரமெரித்த முக்கண் எம்மானே ! அகப்பை அச்சில் ஏறினும் அதனால் அது சிறப்பெய்திய தாகுமோ என வினவு கின்றார் ஆசிரியர்.

Milk can't pe extracted from barren cow. Similarly sweet and nice character can't be achieved by dancing girls. Wicked people won't secure good sense and not to be treated as gentlemen. Oh God with cobra garlands ! The small wretched thing though it be used in good manner won't secure decent price.

42. "அருள் மிகுத்த ஆகமத்தின் பொருளறியார்
தன்னையுமோ அறியார் பின்னே
இருள்வினை பற்றினையார் குருக்க ளென்றே
வுபதேசம் எவர்க்குஞ் சொல்வார்
வரமிகுத்த தண்டலை நீணெரியாரே அவம் செய்கை
மார்க்கமெல்லாங்
குருடனுக்குக் குருடன் கோல்கொடுத்து வழிகாட்டி
வரு கொள்கைதானே

*பொழிப்புரை :-* வேண்டியோர்க்கு வேண்டியன அளிக்கும் வித்தகரே! தண்டலை நீணெரியாரே ! ஆகம உட்பொருளை அறியாதவராய் இருவினை நாள்கோள் முதலியவற்றின் நுணுக்கங்களையும் அறியாதவரராய் மற்றவர்க்கு அறிவுரையும், உபதேசமும் செய்யத் தொடங்குவாரது செயல் குருடர்க்குக் குருடர் வழிகாட்டி நெறிப்படுத்துவதனை ஒக்கும் என ஆசிரியர் இக் கவிதையில் நகைச்சுவையுடன் விளக்குகின்றார்.

Those who are ignorant of the knowledge of scriptures begin to preach and command respect from all as master of all ethical literatures & scriptures are likened that the blind leads to another blind man.

43. "நேற்றுள்ளா ரிங்கில்லை நிச்சயமே ஆதலினால்
நினைந்த போதே
ஊற்றுள்ள போதுதவி யாந்தேடி வைப்பதறிவுடைமை
யன்றோ
கூற்றுள்ள மலையவரு தண்டலை நீணெறியாரே
குடப்பால் வீசும்
காற்றுள்ள போதே எவருந் தூற்றிக் கொள்வார்
தங்கள் கருமந்தானே"

*பொழிப்புரை :-* நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும் பெருமையுடையதாக இவ்வுலகு விளங்குகிறது. ஆகலின் பிறர்க்கு ஒல்லும் வகையில் உதவி ஏற்ற நன்மைகளை விரைவில் தேடிப் பாருங்கள். கூற்றுவன் நம்மை அடர்க்க வரும் நாள் எப்போதென யாருக்கும் இயம்ப இயலாது. ஆகலின் காற்றுள்ளபோதே கடமையுணர்ந்தோர் தூற்றிக் கொண்டு விழிப்புடன் அமைவர் என ஆசிரியர் அழகாக விளக்குகின்றார்.

The man is mortal. At any time he will meet his end. Those who lived yesterday vanish today is the fame of the earth Therefore one must do their best when wind flows favourably.

44. "மற்றவரே தமிழ்பாடி நாட்டவல்லார் நக்கீரன்
வலியனாகில்
வெற்றிபெறு மீனாட்சி சுந்தரனார் தன்னிடத்தில்
விளம்பும் போது
பற்றுள தண்டலை வாழுங் கடவுளென்றும் பாராமல்
பயப்படாமல்
நெற்றிவிழி காட்டினுங் குற்றங்கவி குற்றமென
நினைக்கின்றானே"

*பொழிப்புரை :-* தமிழ்பாடி உலகில் சிறப்போர் யாருளார்? பெரும் புலமையும், தருக்கும் நிறைந்த நக்கீரனே திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளாம் ஆலவாய் அண்ணல் முன் தடைவிடை எழுப்பும் போது கடவுள் என்றும் பாராமல் அஞ்சாது 'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே'

இக்கவி குறை பாடுடையதே' என்று கூறி நின்றான் என நக்கீரனின் அஞ்சாமையினை எடுத்துக் காட்டுகின்றார் ஆசிரியர்.

Nakkeeran, the celebrated Tamil poet without giving due respect to his Almighty who ruled entire Madurai region in those days questioned the purity of the verse composed by the Lord Siva and asserted that the poem was defective in spite of opening His eye in forehead. Who else comes forward to compose poem?

45. "சீரிசைக்குந் தண்டலையார் திருவருளால் சைவநெறி
செழித்த நாளில்
பாரியென வாயிரம் பேர்க் கன்ன தானம் கொடுக்கும்
பலனைப் பார்க்கில்
நேரிய பஞ்சந் தனிலே எவ்வளவாகிலுங் கொடுத்தால்
நீதியாகும்
மாரி யொதுங்கிய நாளில் கொடைதனி லொருகுடம்
நீர் வண்மைதானே"

பொழிப்புரை:- தண்ணருள் கொழிக்கும் தண்டலைப் பெருமானே! ஆயிரம் பேருக்கு பஞ்ச காலத்தில் அன்னதானம் பாரிபோல் அளித்தால் அது பேரறமாகவும், பெரும் நீதியாகவும் கருதப்படும். மழையில்லாது மாரிவறங் கூர்ந்த காலத்துக் குடம் நீர் கொடுத்தாலும் கொடையாகத்தானே கருதப்படும் என ஆசிரியர் அழகாக விளக்குகிறார்.

Oh Lord of Thandalai! At the time of drought one who has offered food for the famine - sticken people as Pari - the ruler of Parambu, hilly region will attain name and fame for his munificence. In such a way when a pot of drinking water can be treated as munificent during the days of famine without rain.

46. "பிறக்கும் போது ஒருபொருளுங் கொடு வருவதில்லை
யுயிர்பிரிந்து வேறாய்
இறக்கு மதினுங் கொண்டு போவதில்லை யென்று சும்மா
யிருந்து நாளும்
கிறக்கு மதயானுக்கு அருள்வார் தண்டலையைச்
சேறாமற் றேசமெல்லாம்
பறக்குங் காக்காயிருக்கும் கொம்பரியாதெனத்
திரிந்தும் பயன் பெறாரே"

*பொழிப்புரை* :- அவமே, வாளாயிருந்து உழன்று வருந்தும் மக்களுக்கும் அருள்புரிவார் அமர்ந்திருக்கும் பதி தண்டலைப்பதியாகும். இவ்வுலகில் மானிட உருப்பெற்று பிறக்கும் போதும் நாம் எதனையும் இங்குக் கொண்டு வர வில்லை. அவ்வாறே இவ்வுலகை நீத்து இறக்கும் போதும் நாம் எதனையும் எடுத்துச் செல்வதுமில்லை. இதுபோலத் தேயமெல்லாம் பறக்கும் காக்கை யிருக்கும் கொம்பு யாது என ஆயும் அறிவினையுடைய செயல் பயனற்ற செயலாகும் என ஆசிரியர் வியந்துரைக்கின்றார்.

Oh Lord of Thandalai ! You bless all those mortals when they are in dilemma. Nothing is brought when we are born and nothing is taken out with us when we leave this world. This action is likened to the effort of one who searches the branch of the tree as the flying crow in the sky. There is no use in searching the branches of the tree when the crow sat & rested once.

47. 'சுற்றமாய் நெருங்கியுள்ளோர் தனையடைந்தோர்
கற்றறிந்தோர் துணை வேறில்லார்
உற்ற வேதியர் பெரியோர்க்குதவியன்றி
பிறர்க்கருளுமுதவி யெல்லாஞ்
சொற்ற நான்மறை புகழும் தண்டலையாரே சொன்னேம்
சுமந்து நாளும்
பெற்றதாய் பசித்திருக்க பிராமண போசனம் நடத்தும்
பெருமை தானே"

*பொழிப்புரை* – நம் உற்றார், உறவினர், நம்மைச் சார்ந்தோர், கற்ற அறிஞர்கள், சார்பில்லாார், நல்ல அருமறை ஓதும் அந்தணர்கள், பெரியோர் முதலியோர்க்கு உதவாது மற்றோர்க்கு அவமே உதவி அழிவதனால் யாது பயன் ? நான்மறை போற்றும் நலம்புரி அண்ணால் ! இச்செயல் பெற்ற தாயினைப் பட்டினி போட்டுப் பிராமணர்க்கு அன்னதானம் அளித்தற்கு ஒப்பாகும் என ஆசிரியர் நகைச்சுவையுடன் எடுத்துரைக்கின்றார் இப்பாடலில்.

Our kith and kin, dependants, most learned people, orphans, destitutes. Learned scholars of scriptures, the most respected wise elders are not the recipients of his mite but the lofers and wicket people have become recipient of his mite. Oh Lord of Thandalai ! This act is likened to make a treat to Brahmins when his mother is (ulterly) hungry.

48 கரப்பார்க்கு நல்லகதி வருவதில்லை செங்கோலிற் கடல்
சூழ் வையம்
புரப்பார்க்கு முடிவிலே சொர்க்க மல்லால் நரகமில்லை
பொய்யீதன்றால்
உரப்பார்க்கு நலம்புரியும் தண்டலையாரே சொன்னேன்
உண்மையாக
இரப்பார்க்கு வெறுஞ்சோறு பஞ்சமுண்டோ ? ஒருக்காலு
மில்லை தானே''

*பொழிப்புரை* :- கரவுடைய நெஞ்சத்தார்க்கு அரியானாகிய இறைவன் கரப்பவர்க்கு அருள் செய்வதில்லை. அவர்கட்கு நற்கதியும் அருளமாட்டான். இவ்வாழி சூழ் உலகமெல்லாம் ஒரு தனிக்குடைக்கீழ் ஆளும் மன்னனுக்குச் சுவர்க்கம் கிட்டுமே யன்றி நரகம் கிட்டாது. இது முக்காலும் உண்மை. அண்டினோர்க்கு அருள் செய்யும் அண்ணலே ! இரப்பவர்க்கு வெறுஞ்சோறு எங்கேனும் பஞ்சமுண்டோ ? என வினவுகின்றார் ஆசிரியர்.

The lord won't bless the man with deep cunning and craftiness. They won't be able to attain the lotus feet of Lord.

The ruler though his reign spreads over throughout the world will reach the heaven and not the hell. Oh My lord ! The poet asks the people of earth if there is any scarcity of simple raw rice to the beggars.

49. "படுங்கால மறியாதார் தண்டலையார் திருப்பணிக்குப்
பங்கம் செய்வோர்

நெடுங்கோலும் தண்டமுமாய் வீணாதி வீணன்போல் நீதி
செய்யார்

கொடுங் கோபமல்லாமல் மழையுண்டோ ? விளை
வுண்டோ ? கேள்வியுண்டோ?

கொடுங்கோல் மன்னவன் நாட்டிற் கடும்புலி வாழுங்காடு
குணமென்பாரே"

*பொழிப்புரை :-* பேரருட் பிழம்பாய் விளங்கும் தண்டலை நாயகரின் திருப்பணிக்குப் பங்கம் செய்வோரும், செங்கோலும் தண்டமும் பிடித்துச் செந்நெறியில் மக்களை ஆளாமல் வீணன் போல் முறை கோடி ஆளும் மன்னரும் உள்ள நாட்டில் அன்னாரின் பெருஞ்சினத்தால் மழையும் விளையுளும், கல்வி கேள்வியும் குறைவுறும். ஆகலின் இவ்வாறு கொடுங்கோலன் ஆளும் நாட்டில் வாழ்வதை விடக் கடும்புலி வாழும் காட்டில் வாழலாம் என்கிறார் ஆசிரியர்.

Those who do harm to Divine sanctity and rule the people in inhuman way with sceptor and crown will find themselves end easily. In their country ruled over by him there would be no rain and no harvest and no wisdom. The forest with ferceious tiger is better than this country ruled over by cruel king to live in

50. "விற்பனர்க்கு வாழ்வு வந்தால் மிக வணங்கி
கண்ணோட்ட மிகவுஞ் செய்வார்

சொற்பருக்கு வாழ்வு வந்தால் கண்தெரியாது இறுமாந்து
துன்பம் செய்வார்

பற்பலர்க்கு வாழ்வு தரும் தண்டலை நீணெறியாரே
பண்பில்லாத
அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரிக்குக் குடை
மேலாகுந்தானே''

*பொழிப்புரை :-* பெருமையுடையோர்க்கு வாழ்வு வந்தால் அவர்கள் யாவரிடத்தும் வணங்கிக் கண்ணோட்டமுடையராய் வாழ்வர். சிறுபொருளுடையோர்க்கு வாழ்வு வந்தால் கண் குருடாய் தருக்குற்றுப்பிறர்க்குத் துன்பஞ் செய்வர். பலருக்கும் வாழ்வளிக்கும் தண்டலைப் பதியமர்ந்த அண்டர் நாயகனே! பண்பற்ற அற்பனுக்கு வாழ்வுவந்தால் நள்ளிரவில் குடை பிடிப்பான் என ஆசிரியர் நயமுடன் விளக்குகின்றார்.

Men with fame if they possess wealth will honour all with respect and devotion. Men with wickedness if they posses wealth will be proud and become blind. Oh Meriful God ! You give life to all who depend upon you and your lotus feet. Men with meagre knowledge and characterlessness provided they possess wealth will have umbrella stretched during even in the midnight.

51. "விசயமிகு தண்டலை நீணெறியாரே வொருத்தர்
சொல்லை மெய்யாயெண்ணி
வசைபெருக அநியாயஞ் செய்து பிறர்பொருளை
யெல்லாம் வலிதின் வாங்கி
திசையறிய கீர்த்தியென்றும் தனமென்றுந்தானமென்றுஞ்
செய்வதெல்லாம்
பசுவினையே வதைசெய்து செருப்பினையே தான்
கொடுக்கும் பண்புதானே"

*பொழிப்புரை:-* வெற்றிபெறு வேந்தே! தண்டலைப் பதியமர்ந்த தலைவா! தீமையும், வசையும் பெருகப் பிறர் பொருளை வஞ்சனையாற் பற்றி நாடு போற்ற தானமும், தனமுஞ் செய்து புகழோடு வாழ்வது பசுவினை வதைத்துச் செருப்பினைத் தைக்கும் செயலிற்கு ஈடாகும் என்கின்றார் ஆசிரியர் இப்பாடலில்.

Oh ! Mighty God of Thandalai. If the wealth extracted from others by ill means and used as munficent and charity for the sake of poor and downtrodden, that action won't be accepted as legitimate one. This action is likened to a man manufacturing chappal out of the skin of the cow.

52. சிறிய வராய் முழுமுடத் துரைத்தனமா யுலகாளுந்
திறம் பெற்றாலும்
அறிவுடையார் தங்களைப் போல் அன்புடையார்
புகழுடைய ராகமாட்டார்
மறிதருமான் மழுவேந்து தண்டலையாரே சொன்னேன்
வாரி வாரி
குறி நீர்மை தானிட்டாலும் குறிவடிவம் கண்ணாகும்
குணங் கொடாதே'

பொழிப்புரை :- கயவர்கள் அறிவற்றவராய் இவ்வுலகை யாளும் திருப்பொறியினை எய்தப் பெற்றிருந்தாலும் அவ் வாட்சிமுறை அறிவுடையோர் ஆட்சி முறைக்கு ஈடாகாது. மானும், மழுவுமேந்திய தண்டலைப்பதியமர்ந்த அண்டர் நாயகனே ! எனக் கவிஞர் ஆழமாகச் சிந்திக்க வைக்கின்றார் இப்பாடல் மூலம்.

Oh ! Lord of Thandalai with deer and fire in His hands. The people of low standard and lofers, if happened to rule over the world, it won't look nice as the wiseman's rule.

53. கற்றவர்க்குக் கோபமில்லை கடந்தவர்க்குச்
சாதியில்லை கருணை கூர்ந்த
நற்றவர்க்கு விருப்பமில்லை நல்லவருக் கொருக்காலும்
நரகமில்லை
கொற்றவர்க்கு மடிமை யில்லை தண்டலையார்
மலர்ப்பாதங் கும்பிட்டேத்தப்
பெற்றவர்க்கு இறப்புமில்லை பிச்சைச் சோற்றினுக்கு
மில்லை பிறப்புத்தானே

பொழிப்புரை :- கற்றவர்கள் சினங் கொள்ளலாகாது உலகப் பற்றினைக் கடந்து வாழ்பவர்க்குச் சாதி, இன வேறு பாட்டுச் சழக்கில்லை. அருள் நிறைந்த அருளாளர்க்கு விருப்பு வெறுப்பில்லை. நல்லவர்கள் என்றும் நரகம் எய்தார். நாட்டையாளும் மன்னமர் சோம்பியிரார். தண்டலைப்பதிய மரும் கண்ணுதலோன் கழலிணை நண்ணப் பெற்றவர்கள் இறப்பினை எய்தார். பிச்சைச் சோற்றினுக்குப் பிறப்பில்லை என்பதனைப் போல் மேற்கூறியவை அமையும் என ஆசிரியர் வலியுறுத்திக் கூறுகின்றார்.

The learned people will never be irritated. Those who shed the worldly passions won't be in any caste or creed. The Sages wont have liking and dislikings. Good and honest people won't reach the hell. The rulers will shed the idleness and those who attain the feet of God will never die and become inmortal.

54. "பிரச முண்டு வழிபாடு தண்டலையார்
வளநாட்டிற் பெண்களோடு
சரச முண்டு போக முண்டு சங்கீத முண்டு சுகந்தானே
யுண்டு
உரை சிறந்த வறுமையுண்டோ? இடுக்கணுண்டோ
ஒன்றுமில்லையுலகுக்கெல்லாம்
அரிசியுண்டாய் வரிசையுண்டாம் மக்களுண்டாகில்
மச்சானன் புண்டாமே"

பொழிப்புரை :- இறைவனை வழிபட்டு வாழ்வோர் உலகில் எல்லா இன்பங்களையும் எளிதில் எய்துவர் என ஆசிரியர் இப் பாட்டில் விளக்குகின்றார். பெண் இன்பமும், இசை இன்பமும் சுகவாழ்வும்,வறுமையற்ற வளவாழ்வும்,இடுக்கணற்ற ஏற்றமுறு வளமும் பெற்றுச் சுகமாக வழலாம் இறையன்போடு வாழ்வோர் என இப்பாடலில் வரையறுத்துக் கூறுகின்றார். அரிசியால் வரிசையும், மக்களுண்டாகில் மைத்துனர் உருவாவதும் இயல்பேயன்றோ எனக் கூறுகின்றார்,

People with divine love will easily have all earthly pleasure and such as music and womanly pleasure and they never taste the utter poverty and anxieties & worries. The merit and prosperity and the brother-in-law will be inevitable when the rice and heirs are in abundance respectively.

55. "தத்தை மொழியுமை சேரும் தண்டலையார்
பொன்னிவளம் தழைத்த நாட்டில்
வித்தக மத்திரியுமில்லை வாசலிலே அநீதியில்லை
வேந்தர்க் கெல்லாம்
புத்தி மனு நீதி சொல்ல மந்திரியில்லா தொருவர்
போதிப்பாரோ
நித்திய முன்னிலை கரியும் நீர்மோரும் பூசனிக்காய்
நிச மென்றுனே"

*பொழிப்புரை* :- கிள்ளைபோல் இன்சொல்கூறும் உமையினை ஒருபுடை கொண்ட தண்டலைத் தலைவா ! நீ அருளாட்சி புரியும் பொன்னி நாட்டில் வித்தக அமைச்சருமில்லை. வீதியிலே வீட்டின் முகப்பிலே அநீதியுமில்லை. வரும் பொருள் உரைக்கும் வன்மை மிக்க அமைச்சரில்லாது அரசர்க்கு வேறு ஒருவர் அறிவுரை கூறுவார்களோ ? என ஆசிரியர் அமைச்சரில்லாத அரசன் நிலைபற்றிக் கூறுகின்றார்.

Oh, Lord' You are with Uma, the Consort of Lord with sweet words like parrot. The Country in which you rule has no minister, no injustice, and without ministers who has to advise the ruler during his reign? In this poem the author points out the exact situation of the ruler of the country without the skilful ministers.

56. "முன்பெரியோர் தொன்று தொட்டு நடந்த வழி தனைப்
பழித்து முரண்டு பேசி
பின்பில்லாருடன் கூடி நூதனமாய் நடத்துவதில்
பெருமை காணேன்

துன்பறியா தருள்புரியும் தண்டலையாரே சொன்னேன்
தூயளாகிய

அன்புள தாயைப் பழித்து மகள் ஏதோ செயத்
தொடங்கு மறிவு தானே"

*பொழிப்புரை :-* முன்னோர் சென்ற நெறிக்கு முரணி தொன்மை நீக்கிப் புன்மை போற்றி மகளிருடன் இன்புறக் கூடி இனிய வாழ்வு நடத்துவதில் யாதும் பயன் காணேன். அன்பு இறைவா! துன்பத்தை அறியாமல் இன்பத்தையே செய்யும் தண்டலைப் பெரியோனே! அன்புத்தாயைப் பழித்து அறியாதவள் என அகற்றிவிட்டு மகள் ஏதோ புதுமை செய்யப் புறப்பட்டது போலாகும் எனப் புகல்கின்றார் ஆசிரியர்.

The man, adopting to new ways and means for his livelihood abandoning the methods laid down by elders and wise men will face utter confusion. Oh lord of Thandalai this is compared to the action of a daughter completely ignoring the mode of life of her mother.

57. "பணந்தானே யறிவாகும் பணந்தானே வித்தையுமாம்
பரிந்துதேடும்

பணந்தானே குணமாகும் பணமில்லாதவர் குணத்தின்
பான்மையென்னே!

பணந்தானே பேசுவிக்கும் தண்டலை நீள் நெரியாரே
பாரமெல்லாம்

பணந்தானே குலமாகும் பசிதானே காயாகும்
பண்புதானே"

*பொழிப்புரை :-* உலகில் பொருளின் சிறப்பினையும், பொருளில்லார் எய்தும் இன்னல்களையும் இப்பாடலில் ஆசிரியர் விளக்குகின்றார். பணமே அறிவாகும், கல்வியுமாகும்: பாரில் பணமே குணமாகவும் கருதப்படும். பணமில்லார் பண் பற்றோராய்க் கருதப்படுவர். பணம் இருந்தால் பேச்சு

சுதந்திரமாக எழும். பணமே குலத்தையும் நல்கும். இவ்வாறு பணமே உலகில் எல்லாமாய் நிறைந்து எங்களும் சிறந்து ஆட்சி செய்கின்றது என ஈசனை முன்னிறுத்திப் பேசுகின்றார் ஆசிரியர்.

Oh God ! The wealth is knowledge, the wealth is art, and wealth is considered to be good quality and those who have not wealth will be treated as worthless men. The wealth makes one speak and it makes each and everything in the world prestigious. The poet wonders how this world is centering round the wealth in all walks of life.

58. தண்மை செறி மலர்ச்சோலை தண்டலை நீணெரியா
யுன் தன்னைப்பாடி
எண்ணமிகும் இம்மையினும் மறுமையினும்
வேண்டியதுண்டு இதை ஏறாமல்
மண்ணின் மிசை நாத்துதிகள் பண்ணியலைந் தொழியும்
வருத்தமெல்லாம்
வெண்ணெய் கையிடத்திருக்க நெய்தேடிக்
கொண்டலையும் விபரந்தானே'

*பொழிப்புரை:-* குளிர்ந்த மலர்ச் சோலைகள் நிறைந்த தண்டலை நீணெரியாரே ! உம்மை எளிமையாகப்பாடி இம்மை, மறுமைப்பயனை அடைய அலைந்தொழியாது. இந்நிலவுலகில் நாத்துதிக்கப்பாடி அலைந்தொழிந்தேன் இவ்வாறு நான் வருந்திய வருத்தம் கையில் வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய்தேடி அலையும் அறிவற்றோர் செயலுக்கு ஒப்பாக வல்லவா உள்ளது என ஆசிரியர் விளக்குகின்றார்.

Oh! Lord of Thandalai which is surrounded by groves and gardens I can easily reach you and offer my prayer at Thandalai. Leaving behind this, in search of spiritual thirst, I wandered throughout the world in praise of God - Alhmighty This poor action of mine is likened to man who is in search of ghee while having the butter in one hand.

59. அந்தணர்க்குத் துணைவேதம் அரசர்க்குத்துணை
வாய்வாள் ஆதிநின்ற
மைந்தர்க்குத்துணை தாயார் தூதருக்குத்துணை
மதுரவார்த்தையன்றோ
நந் தமக்குத் துணையான தண்டலை நீணெறியாரே
நண்பரான
சுந்தரர்க்குத் துணை நாளும் ஏழைக்குத் தெய்வமெனும்
துணையதாமே"

பொழிப்புரை:- மறைவல்லோர்க்குத்துணை வேதம் பயிலல். மன்னர்க்குத்துணை கூரியவாளாகும், மக்களுக்குத் துணை தாயேயாவர். தூதர்கட்குத்துணை இன்சொல்லாகும். நம் அனைவர்க்கும் துணையான தண்டலைத் தலைவனே! இறைவா! நீ சுந்தரராகிய அடியவர்க்குத் துணை செய்த செயலால் தெய்வம் என்றுமே ஏழைக்குத்துணை செய்யும் என அறியலாம் என ஆசிரியர் அரிதின் விளக்குகின்றார்,

The vedic scriptures are most helpful to the people of Divinity. The sharp edged sword is the friend of the king and the guarding mother is always in defence of her sons and the sweet words are helpful for the emissarie's employed by the king. Smilarly we all depend upon your help Oh Lord of Thandali since you become the friend of your devotee, Sundaramurthi,. One can easily understand that God is ever helpful to the needy and poor.

60. 'சகமிக்க தண்டலையாரடி போற்று மகராசா
சபையில் வந்தால்
சுகமிக்க வேசியர்க்குப் பொன்னூறு கொடுப்பர் தமிழ்ச்
சொன்ன பேர்க்கு
அகமுற்றச் சோறிடுவார் அந்தணர்க்கெல்லாம்
நாழியரிசி ஈவார்
பகடிக்கே பணம் பத்து திருப்பாட்டுக் கொருகாசு
பாலிப்பாரே"

*பொழிப்புரை* :- தண்டலைத் தலைவனின் தண்ணார் திருவடிகளைப் பற்றி நிற்கும் அரசர்கள் முன்னே ஆடல் அரசிகள் தோன்றினால் அகம் நிறைந்து நூறு பொன் ஈவார்கள். தமிழால் புகழ்வோர்க்கு நல்லூண் நல்குவர். அந்தணர்க்கெல்லாம் படியரசி நல்குவர். நகைச்சுவை அளிக்கும் கோமாளிகட்குப் பெருஞ் பரிசிலும் தமிழ்க் கவிதை பாடும் தக்கார்க்கு சிறுகாசும் நல்குவர். என்னே இவ்வுலகினர் அறியாமை என ஆசிரியர் அலமருகின்றார் இப்பாடலில்.

The rulers who worship the Lord of Thandalai, present costly and rich ornaments to the dancing girls who appear before them, the poor rice will be supplied only for those who tribute him in Tamil and the brahmins supplied with a measure of raw rice and the clowns are presented richly while the songsters are meagrely paid and honoured. Such is the world habit of now a days. The poet wonders innocence of the earthly people.

61. "பேரிசை கண்டறியாது தலைச்சுமைசுளே சுமந்து
பிதற்று வானும்
போரில் நடந்தறியாது பதினெட்டாயுதஞ் சுமந்த
புல்லியோனும்
ஆரணார் தண்டலை பணியாது திருவேடப்பொருள்
சுமந்த அறிவில்லோனும்
காரிய மொன்றறியாது வறிதேகும் மண் சுமந்த கழுதை
தானே

*பொழிப்புரை* :- தலையில் சுமைகளைச் சுமந்து வாழும் இசையற்ற மனிதனும், போரில் பங்கேற்காது பல்லாயுதங் களைச்சுமந்து திரியும் புல்லனும், தண்டலையாரைவணங்கி வழி படாது வேடந்தரித்து வாழும் பொய்யனும், உலகில் நல்ல காரியத்தைச் செய்ய அறியாது மண் சுமந்த கழுதைகளைப் போல மதிக்கப்படுவர்.

The simple and fameless man with head load the man without armery training of all kinds of weapons and the man who pretends to be a saint without devotion to the Divinly of Thandalai are treated like the donkeys laden with earth in their back.

62. "பேரான கவிராசருடன் சாற்றுக்கவிகளெனும் பிரபந்தஞ்
செய்வார்

வீராதி வீர்ருடன் கொல்லகளும் வாள் பிடித்து விருது
சொல்வார்

பாராளும் தண்டலை நீணெரியாரே யிருவகையும்
பகுத்துக் காணில்

ஆராயும் மகதேவ ராடிடத்துப் பேய்களும்
நின்றாடுவர்ரோ".

*பொழிப்புரை* :- இவ்வுலகினை அருளாட்சி செய்யும் தண்டலைப் பெருமானே ! புகழ் மிக்க பெருங்கவி எனப்பெயர் பெற்ற கவிராசருடன் சாற்றுக்கவி போன்ற சில கவிபாடும் சிறுகவிகளும், போர்க்களங்களில் ஆயிரம் யானைகளை அமரிடை வென்ற பெருவீரனுடன் கொலை பல செய்யும் கொடியவரும் ஒப்பாவரோ ? இச்செயல் பேரருளாளன் அருள் செய்யும் பேராலயத்தில் பேய் நின்றாடும் பெற்றியை ஒக்கும் என ஆசிரியர் எள்ளி நகையாடுகின்றார்.

Oh lord ! The man with few verse can't be put on par with the Emperor among poets. Similarly the warrior who is able to destroy thousands of elephants at a stroke won't be compared to a murderer. This can be compared to Dancing of Devils in the Temple of Almghty.

63. 'கார்மிகு மலையினுந் திரணமென்பார் கடலையள்ளியே
குடிப்பார்கருணைத் தொண்டர்

பார்மிகுந்திடில் உலகம் பதினாலுங்கீழ்மே லாய்ப்
படிவதென்றோ

தாரணியுந் தண்டலையார் தொண்டு புரிவில்
மீண்டான்றனமுண்டாகில்
ஊரனையுமாபுரம் வென்றா னாயனையும் புரம்
வென்றானோடினானே

*பொழிப்புரை :-* இப்பாடலில் அண்டர் நாயகனின் தொண்டராம் அடியவர்களின் அளவற்ற சிறப்பினைப் புகழ்ந்துரைக்கின்றார் ஆசிரியர் திரணமாகக் கருதி இறைவனின் அடிப்பொடியாம் அடியவர்கள் கடலையள்ளி எளிதாகக் குடித்துவிடுவார்கள். இவ்வுலகு பிறழ்ந்து பதினான்கு உலகங்களும் நிலைகுலைந்தாலும் இறைவன் அடியவர்கள் நிலை குலையார் என ஆசிரியர் இப்பாடலில் விளக்குகின்றார்.

The poet, in this verse explains the popularity and the boundless fame of the saints who are capable to drink the entire water of the ocean. They, without any fear of the changing of planets and the world lead their lives peacefuly.

64. "கனத்திலே மிகுத்த செழுந் தண்டலையார் பொன்னி
வளங் கலந்த நாட்டில்
மனத்திலே மிகு பெரியோர் அவ்வாறே மனமொன்றாய்
எல்லாஞ் செய்வார்
சினத்திலே மிகுஞ் சிறியோர் காரியமோ சொல்வதொன்று
செய்வதொன்றாய்
மனத்திலே புகையாகி யுதட்டிலே உறவாகி
மடிவர் தாமே

*பொழிப்புரை :* அண்டர் நாயகனாம் தண்டலையார் உறையும் பொன்னி நாட்டில் செயற்கரிய செயலாற்றும் பெரியோர் தம் நிலையினின்றும் மாறாது அரிய செயல்களையே ஆற்றுவர். ஆனால் சினமிகு சிறியாரோ சொல்வதொன்றும், செய்வதொன்றுமாய் வேறுபட்டு வாழ்வர். இச்செயல் அகத்தே கருத்து புறத்தே நகைக்கும் இழிசினர் செயலாகும் என ஆசிரியர் இகழ்ந்துரைக்கின்றார்.

Oh Lord of Thandalai, irrigated by the sacred river Ponni The men of virtue will never change their attitude from being virtuality. The attitude of men of lower calibre is entirely different from the people of righteousness. The action is entirely different from their speech of lip service while they form enmity in heart.

65. 'தேரோடு மணிவீதி தண்டலையார் வளங்காணும்
தேசமெல்லாம்

பேரோடு புகழ்படைத்து வீராதி வீரரென்றும்
பெரியோரென்றும்

நேரோடு மலர் முகத்தோ டொன்றுபட்டு
நடப்பதுவே நீதியாகும்.

ஊரோட உடனோட நாடோட நடுவோடல்
உண்மைதானே''

*பொழிப்புரை :-* தேரோடும் மணி வீதிகளையுடைய தண்டலை நாயகனின் அருள் பாலிக்கும் நாடுகளில் எல்லாம் பேரும் புகழும் படைத்து வீரர்கட் கெல்லாம் வீரராயும் வாழும் மக்கள் எல்லாம் மற்ற மக்களோடு மலர்ந்த முகத்துடன் ஒன்றி வாழ்வதே உயர்ந்த நெறியாகும். ஏனெனில் ஊரோடு ஒத்து நடக்கவேண்டும் என்பது உலகியல் மொழியாகும் அன்றோ என ஆசிரியர் வியந்துரைக்கின்றார்.

The lord of Thandalai a hamlet with wide streets in whieh His chariots use to run frequently, men with fame and prowess should cooperate with others of that region because it is a 'must' for them to gain prosperity and popularity among them.

66. இழை பொருத்த முலைபாகர் தண்டலையார் வள
நாட்டில் எடுத்த ராகம்

அழுதழுது பாடுவதில் மவுனமாயிருப்பதுவே அழகு
தானே

குழகுழத்த கல்வியினும் கேள்வியினும் கல்லாமை
குணமேயாகும்
வழவழத்த உறவுதன்னில் வயிரமுள்ள பகையேதான்
வன்மையாமே"

*பொழிப்புரை :-* இழையணிந்த உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன் அமர்ந்து ஆட்சி செய்யும் தண்டலை நாட்டில் அழுது பாடும் இராகத்திலும் மவுனமாயிருப்பது அழகாகும் எனவும் ஆற்றலில்லாத கல்வி கேள்விகளைவிடக் கல்லாமை நல்லதெனவும் வழவழத்த உறவினைக் காட்டிலும் வயிரமிக்க பகை மேலானதென்றும் ஆசிரியர் இப்பாடல் மூலம் விளக்குகின்றார்.

The poet describes in this poem the exact position & fertility of the Thandalai in which the Lord Siva with his consort Uma live to gether to bless all those who offer prayers and dedication. One, being silent is better than singing of verse of lamentation and the illileracy is better than non-deep rooted study and listening to the wise and the enmity is better than the soundless relationship.

67. "தனமேவு மடித்தடி மண்குருந்தடி மண்பரம
குண்டந்தனிலோர்
மனமேவு மணியுடனே மந்திரமுந் தந்திரமு மருந்துமாகி
இனமேவுந் தண்டலையார் தொண்டருக்கு வந்த பிணி
யெல்லாந்தீர்க்கும்
அனுபோகந் தொலைந்தவுடன் சித்தியாம் வேறுமுள்ள
அவமே தானே"

*பொழிப்புரை :-* இறைவா! தண்டலைத்தலைவா! குருந்த மரத்தடியிலும், குண்டந்தனிலும், மணிமந்திரம் ஔடதம் முதலியன மேற்கொண்டு அடியார்க்கு ஏற்பட்ட அல்லல் நோய்களை நல்லவர்கள் நீக்க முயல்வார்கள். இத்தகு அனுபவம் நீங்கிய பின் சித்தி எய்துவது இயற்கையாகும் என ஆசிரியர் இனிதே விளக்குகின்றார்.

Oh lord of Thandalai ! In olden days the sick of the Devotees will be dealt with suitable medicines, manthras and otherways by the eminent experienced medical men. Similarly after the vast experience one will attain 'Sithi' in his last period by his efforts.

68. "கானமருங் கவரியொரு மயிர்படினுயிர் நிற்குமோ
கழுதைக் குண்டோ
மானமுடன் வாழ்பவரே மாபுருடன். சுயோதனனை
மறந்தாருண்டோ?
ஆனகஞ் சேருலி முழங்கு தண்டலை யாரே
சொன்னேன் அரைக் காசுக்காய்
போன மான மின்னம் ஆயிரம் பொன் கொடுத்தாலும்
பொலிந்திடாதே"

*பொழிப்புரை* :- கானிலே உறையும் கவரிமான் ஒருமயிர் இழப்பினும் உயிர்விடுந்தன்மையதாகும். அதுபோல மானமுடன் வாழ்பவரே சிறந்த மக்களாய் - புருடோத்தமர்-களாய் கருதப்படுவர். பாரதத்தில் இடம் பெறும் கொடியோன் துரியோதனனை யாரும் உலகில் மறக்கவில்லை. ஆகையால் தண்டலைப் பெருமானே! அரைக்காசுக்காக இழந்த மானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் மீட்க இயலாது என்று ஆசிரியர் அழகாக இப்பாடலில் விளக்குகின்றார்.

One kind of deer named after 'Kavari' even if it looses a single hair from its body, immediately it will die. Similarly the man with righteousness is really a man with life and fame. others are not so. Nobody can forget 'Suyothana' of Mahabaratha. The name and fame lost for single penny and for petty reason won't be regained even at the expenditure of thousand of gold.

69. "கைக்கெட்டா தொருபொருளுங் கணவர்க்கு நகையாகும்
கனமோயில்லை
இக்கட்டே வருவதல்லால் செல்முண்டோ ? கவறு
கையாலெடுக்கலாமோ ?

திக்கெட் டேறிய கீர்த்தி கண்மலையார் வளர்நாட்டில்
சிச்சியென்ன

சொக்கட்டா னெடுத்தவர்க்குச் சொற் கேட்டான்
பொல்லாத சூதுதானே''

பொழிப்புரை:- கவிஞர் இப்பாடலில் சூதின் இழி தகைமையினைச் சுட்டிக் காட்டி அது விலக்கப்படவேண்டிய செயல் என உலகோர்க்கு இடித்துரைக்கின்றார். கவறு எனும் சூதாடு கருவி எடுத்தோனுக்கு இக்கட்டு வருமேயன்றி இன்பம் வாராது என்கின்றார் ஆசிரியர். மேலும் சொக்கட்டானெடுத்தாடி துயரடைந்த செய்தியினைப் பாரதம் போன்ற இலக்கிய வாயிலாகவுங் இனிது உணர்த்துகின்றார் ஆசிரியர்.

The poet describes in this verse the evilness of gambling which brings out only evil and not any wealth. Those who take the tools for gambling into their hands to play will meet decay certainly in due course.

70. ',நிலைசேரும் அதிகவிதான சமுகத்துரைகளுடனே
சமமாகிப்

பலநாளும் வரையெடுத்தவர்க்கே பயமல்லால் பயமு
முண்டோ

கலை சேரும் திங்களணி தண்டலையாரே சொன்னேன்
கண்ணில் காண

மலை மீதி லிருப்பவரை வந்து பணிந் தடியாத வண்ணந்
தானே''.

பொழிப்புரை :- இறைவா! கலைமிகு திங்களணிகண்ணுதலே! தண்டலைத் தலைவா! இமயவரை அமர்ந்த ஏந்தலே! நுமக்கு அஞ்சி வாழ்வதன்றி வேறொரு மானிடனுக்கு யான் அஞ்சி வாழ விரும்பவில்லை என இறைவன்பால் சொண்ட ஏற்றத்தையும் மற்றோர்பால் கொண்ட மயக்கத்தினையும் ஆசிரியர் விளக்குகின்றார்.

Oh lord of Thandalai ! I am very much afraid of you for committing any sins against the spiritual code. I never care about others of earthly creations except you because they are not capable of wiping out any of my sins in my life.

71. "புரையுடனே அறிவுடையோர் விளக்கேற்றிப் புகழ
வேண்டும்
இருபையுட னிறுமாந்து கால்மேலாய் நடந்து
தலைகீழாய் * வாழவேண்டும் ………
மறுமையினும் இம்மையினும் சூாணலாந் தண்டலையார்
வாழும் நாட்டில்
நிறைகுடமே தளும்பாது குறைகுடமே கூத்தாடி
நிற்குந்தானே"

பொழிப்புரை :- தண்டலை இறைவா ! கீழான மக்கள், அறிவுடையோர் தங்களை மிகுதியாகப் புகழ வேண்டும் என விழைவர். மேலும் அக்கயவர் அகந்தையுற்று மற்றவர்களை அவமதிப்புடன் நோக்குவர். இச்செயலை நாம் இவ்வுலகில் எளிதாகக் காணலாம். இச்செயல் குறைகுடமே தழும்பும், நிறைகுடம் தழும்பாது என்னும் நிறைமொழியினை நினைவுறுத்தி நிற்கின்றது என்கிறார் ஆசிரியர்.

* ஏட்டிலில்லை எனினும் இடம் நோக்கிச் சேர்த்துள்ளேன்.

Oh Lord of Thandalai ! The wretched low people expect the grand tribute of the learned, wise men and they never respect the Divine people. This action reminds us rhe proverb the pot with full of water never shakes whereas the pot with few will shake itself.

72. "ஞால முறும் நல்லவர்க்குச் செல்வம் வந்தால்
எல்லோர்க்கும் நாவலர்க்கும்
கால மறிந் தருமையுடன் பெருமை புரிந்துதவி செய்து
கனமே செய்வார்

மாலறியும் தண்டலை நீணெறியாரே அவர் நாளும்
மகிழ்ந்து சால
ஆல மரம் பழுத்தவுடன் பறவையின்பால்
சீட்டெவரும் அனுப்புவாரோ

பொழிப்புரை :- உலகறிந்த நல்லவர்க்குச் செல்வம் சேர்ந்தால் அச்செல்வம் நாவலர்க்கும், நானிலத் தோர்க்கும் எளிதில் பயன்பட்டுப் பேருதவியாகக் கருதப்படும். நாவலரையும், பாவலரையும் அந்நற் செல்வர் போற்றிப் புகழ்ந்து ஏத்தித்துதிப்பர். தண்டலை மேய தலைவா ! ஆல மரம் பழுத்தால் பறவைகட்கு விருந்துண்டு செல்ல வருக என்ற அழைப்பினை யாரும் விடுப்பதில்லை. அதனைப் போலவே நல்லவர் செல்வம் நாளும் பயன்படும் என்கிறார் ஆசிரியர்.

The wealth of wise can be utilized by one and all who are needy and he respects the poets and others in a honourable way. Similarly the banian tree if it has ripened fruits, the birds won't be invited to dine with the friuts.

73. 'ஆழியெல்லாம் பாழாகி அவனியெல்லாம் அன்னபய
மானாலென்ன
சூழ்புவியிலிரப்பவர்க்குப் பசிதீர வுண்டிருக்கச் சுகம்
தானுண்டோ ?
ஏழுலகும் புகழவருந் தண்டலையாரே சொன்னேன்
எந்த நாளும்
நாழி நெல்லுக்கொரு புடவை விற்றாலும் நெருமானும்
காய்க்குத்தானே'

பொழிப்புரை :- உலகினைச் சூழ்ந்துள்ள கடல்கள் எல்லாம் நீர்வற்றி இவ்வுலகம் முழுதும் உணவினுக்கு அச்சமுற்ற போது இவ்வுலகில் இரவலர் பசிதீர உண்டு சுகம் எய்த முடியுமா ?. ஏழுலகும் புகழ் ஏந்தலே ! நாழி நெல்லுக்கு ஒரு புடவை விற்றாலும் என உலகு ஏங்கும் போது ஒருவர் சுகம் எம்மாத்திரம் என ஆசிரியர் இழித்துரைக்கின்றார்.

When all mighty Oceans are dried up without water and all people stricken with care and anxiety for food, one can't be idle and peaceful after taking sumptuous food being the silent spectator watching allround situations.

74. "கல்லான தெல்லாமோர் மாணிக்கக்கல்லாமோ ?
காமமான

பொல்லாத கரும் புகழைக் கந்தன்திருப்புகழுக்
கிணையாய்ப் புகலப்போமோ

சொல்லான தெல்லாமோர் தண்டலையைத்துதிக்கின்
நிகர்சொல்லப்போமோ

எல்லாம் மானிடவ ராவாரோ ஆவதில்லை
யென்றுந்தானே"

*பொழிப்புரை :-* ஒளி வீசும் கற்களெல்லாம் மாணிக்கக் கற்களாக மதிக்கப்படுமா ? காம விழைவில் பாடிய புகழ் எல்லாம் கந்தன் மேல் பாடிய திருப்புகழுக்கீடாகுமோ ? சொல்லெல்லாம் தண்டலையைப் பாடித்துதித்த சொல் லாகுமோ ? உலகிற் பிறந்த அனைவரும் மனிதபண்பு மிக்க வராய் போற்றப்படுவாரோ என உலகியலை எடுத்துரைக் கின்றார் ஆசிரியர்.

All that glitters is not diamoud. The verse of love won't be likened to Thirupukazh in praise of Lord Muruga by saint Arunagiri. The word which does not praise Thandalai may not be considered as real and rieh word. All born creatures are not called upon as men of character.

75. "ஞானமுறு தண்டலை நீணெரியாரே விண்ணப்பம்
நவிலக் கேளீர்

தேனமிர்தம் ஒளிபேசும் பெரியோர்கள் திருவுளத்தில்
தெளிந்தபுத்தி

...னருக்குச் சொன்னாலும் கேட்பதில்லைச் சொல்லுவதே
தன்மை யாமால்
வானரத்துக் கண்பாயத் தூக்கணஞ் சொல்லிடர்கள்
பட்டவண்ணந்தானே".

பொழிப்புரை :- வாலறிவின் மிக்கோனே! தண்டலை நாயகனே! நும்பால் வேண்டும் விண்ணப்பத்தினைக் கேட்டருளுவீராக. அமிர்தம்போல் ஒளிமிக்க தெளிந்த அறிவினைப்பெரியோர்கள் அற்பர்க்கு எடுத்துரைத்தாலும் அவர்கள் கேளாச் செவியராவார். வானரத்தின் கண்ணிற்பட்ட தூக்கணங் குருவியின் கூடுபோல் அன்னார் வாக்கு அற்பர்களிடையே அவமதிப்பினைப் பெறும் என ஆசிரியர் அழகுற விளக்குகின்றார்.

Oh lord of Thandalai. This is my humble request. The philosophical words of people of righteousness can't be respected by lofers. This is compared to the monkey's action towards the nests of the sparrow.

76. "நாற்கவியும் புகழவரு தண்டலையார் வளநாட்டு
நல்லநீதி
மார்க்கமுடன் செங்கோல் வழுவாமல் புவியாளும்
வண்ணம் செய்தால்
தீர்க்கமுள்ள ராசனையே தெய்வமென்பார் கொடுங்
கோன்மை செலுத்தி நின்றால்
மூர்க்கமுள்ள ராசனும் தன்மத்திரியுமாய் நரகில்
மூழ்குவாரே".

பொழிப்புரை :- நான்கு வகைப் பாக்களாலும் புகழப்படும் தண்டலை நாட்டில் அறநெறியறிந்த மன்னர்கள் 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என அறிந்து அறத்துடன் ஆட்சி செய்தால் அனைவராலும் 'இறை' என்றே மதிக்கப்படுவர். அதனை விடுத்து அல்லன செய்து கொடுங்கோல்

செலுத்தின் அம்மன்னனும், அம்மன்னர்க்கு வரும் காலம் உரைக்கும் மதியமைச்சனும் ஒருங்கு அரு நரகில் ஆழ்ந்து அழிந்து போவர் என அழகாக ஆசிரியர் விளக்கி உரைக்கின்றார்.

Oh Lord ! The country, if it is ruled by a King adopting ethical moral codes the people of then land will flourish with wealth and health. If it is ruled in illegal and immoral way by the ruler and his ministers they will fall in hell.

77. செழுங்கள்ளர் நிறைசோலை தண்டலையார் வள
நாட்டில் திருடிக் கொண்டே
எழுங்கள்ளர் நலங்கள்ளர் பொல்லாத கள்ளர்
இவராரோ வென்னக்
கொழுங் கள்ளர் கையால் கும்பிடுங் கள்ளர் திருநீறு
குழைக்குங் கள்ளர்
அழுங் கள்ளர் தொழுங்கள்ளர் ராசருக்கு கள்ளரிவர்
ஐவர் தாமே

*பொழிப்புரை :-* உள்ளங் கவர் கள்வனாகிய உமைபங்கன் தண்டலையார் உறையும் நாட்டில் திருடுங் கள்வர், நலத்தை அபகரிப்போர், அச்சுறுத்துவோர் இவ்வாறு பலதிறப்பட்ட கள்வர்கள் உள்ளனர். ஆனால் கொழுங் கள்வர், கும்பிடுங் கள்வர், திருநீற்றினைக் குழைத்துப் பூசும் கள்வர், அழவும் தொழவும் செய்யும் அருமைப்பாடுடைய கள்வர்கள் என ஐவகைக் கள்வர்கள் அரசர்கட்கு அமையும் கள்வர்கள் என ஆசிரியர் விளக்குகின்றார்

Oh Lord ! you steal our heart. Thou are a thief. your kingdom is full of thieves. Among them five are to be noted such as fat with wealth and thief with bowed folded hands, with sacred ashes and those weeping and felling at the feet of the lord.

78. "புனங்காட்டும் மண்ணும் விண்ணும் அஞ்சவரும்
காலனையும் போடாவென்றே
இனங்காட்டும் மார்க்கண்டன் கடிந்து பதினறு
வயதென்றும் பெற்றுன்.
அனங்காட்டும் தண்டலையா ரடியாரே ஒருவர்க்கு
மஞ்சுவாரோ?
பனங்காட்டு நரிதானும் சலசலப்புக் கஞ்சி யது
பயந்திடாதே"

*பொழிப்புரை :-* கடல் சூழ்ந்த மண்ணவரும் அஞ்சி வணங்கும் காலனையே முன்னொருக்கால் இறையடியானாகிய இளைஞன் மார்க்கண்டன் "போடா" எனக் கடிந்து என்றும் பதினாறு வயதினை இறைவனருளால் பெற்றான். ஆகலின் தண்டலைக் கண்ணுதலே! நும்மடியார் யாருக்கும் அஞ்சார் என்பதனை யாமறிவோம் பனங்காட்டு நரி சலசலப்பிற்கு அஞ்சாது என்பது பழமொழியல்லவா என நினைவுறுத்துகின்றார் ஆசிரியர்.

The Disciple of Lord, Siva, Markandan who is terror to God of life (i. e) Yamadharma and he in turn is terror for earthly & celestial beings, and the former secured life for ever green sixteen with the grace of Lord Siva The foollowers of God won't be struck with terror like the jackal of palmyra grove won't be afraid of continuing sound and whistle.

79. "வல்லமையால் வருவதுண்டோ தலைகீழாய்
வீழ்ந்தாலும் வருமோ செல்வம்
அல்லதுதான் சிவன்செயலே அல்லாதுதன் செயலா
லாவதுண்டோ ?
புல்லறிவால் மயங்காமல் தண்டலையார் தினம்
பணிந்தால் புத்தியுண்டாம்
இல்லாது வாராது நமக்குள்ளது போகாதென்று
இருக்கலாமே"

பொழிப்புரை :- இறையருளால் எல்லாம் நிகழ்கிறது. நம் ஆற்றலால் அடுத்து முயன்றாலும், தலைகீழாக வீழ்ந்தாலும் செல்வம் எளிதில் வந்து ஒருவரை அடைந்து விடுமா ? எல்லாம் இறை செயலேயன்றித் தன் செயலால் எது நிகழ்கிறது. நாடோறும் நற்றவ நாயகனாம் தண்டலைத் தலைவனை வழிபட்டால் அறிவு உண்டாகும் இல்லாதது வாராது. உள்ளது போகாது என்பது இன்னும் வழங்கும் வழக்கன்றோ என ஆசிரியர் இடித்துரைக்கின்றார்.

Everything is wrought by God even if one toils terribly wealth won't be accumulated. If he is blessed by the Almighty he will acquire a good deal of wealth. This can be attained only by the grace of God by the continous effort.

80. போரஞ்சான் அதிவீரன் பொருளஞ்சான் விதானஞ்
சேர் புருஷன் தோன்றும்
நீரஞ்சான் மறைமுனிவன் நெருப்பஞ்சார் கற்புடைய
நெறிசேர்மின்னார்
வாரஞ்சாமுலை சேரும் தண்டலை நீணெரியாரே
மதவேளென்னும்
காரஞ்செய் சிங்காரம் கனத்த வலியான தூதன்
கண்ணஞ்சானே

பொழிப்புரை :- பெருவீரன் போருக்கஞ்சிப் புறங் கொடாது அமர் செய்வான். பெருமை மிக்க நல்லோன் பொருளிழப்பினுக் கஞ்சமாட்டான். நான்மறை முனிவர் நன்னீர் ஆடற்கஞ்சி ஒதுங்கார். கொண்ட கொழுநனே தெய்வ மெனும் கற்புடையார் நெருப்பினுக் கஞ்ச மாட்டார்கள். தண்டலைப்பதி யமர்ந்த எண்டோள் முக்கண் எம்மானே மதவேளின் கணைகளுக்கு மன்னனின் தூதன் அஞ்சான் என்று சிறந்தோரின் சீர்மையினைக் கவிஞர் எடுத்தோதுகின்றார்.

Oh Lord ! A valiant is never daunted to warefare. The gentleman never cares for spending money for the sake of virtuous deeds. The vedic scholars and sages won't be afraid of water and the women of chastity are never afraid of fire. The spy of the king is never afraid of lust lured by women.

81. "சின்னமெங்கே கொம்பெங்கே குதிரை எங்கே சிவிகை
எங்கே சிவியா ரெங்கே
பின்னையொரு ஆளுமில்லை நடத்தை குலைந்தா
லுடனே பேய்பே யென்றே
சொன்னவிலுந் தண்டலையார் வளநாட்டில் குங்கிலியத்
தூபங் காட்ட
சன்னத மானது குலைந்தால் கும்பிட்டெங்கே குவோம்
பிறிதுதனை எண்ணாதார்"

பொழிப்புரை ; தண்டலையின் அருளாட்சி செய்யும் அருளாளா ! பெருஞ்செல்வம் எய்திச் சீரும் சிறப்பும் பெற்று சின்னமும், கொம்பும், சிவிகையும், சிவிகை தாங்குவோரும் பெற்று வாழ்வில் உயர்ந்து நின்றோர் அவைகளையெல்லாம் இழந்து வறியராய் ஆளுமின்றி, ஆட்சியுமின்றி உலவப் பெறுவதனை உலகியலில் கண்கூடாகக் காண்கின்றோம். அது போல் இறைவற்குப் புகையும், பூவும் காட்டி வழிபட இயலாத வறுமை நிலை வாய்த்தால் கும்பிட்டெங்கே சென்று உய்வோம் என ஆசிரியர் அங்கலாய்க்கின்றார்.

Oh lord of Thandalai ! The men who live with pomp & show and luxury, having large wealth, palanquin the carrier of it will loose all of them and walk alone without any single follower. This is not unnatural & become common affair of the earth.

82. அடுத்த மனைதொறும் புகுவாள் கணவனுக்கு முன்
உண்பாள் அடக்கமில்லாள்
கடுத்தமொழி பேசிடுவாள் சிறுதனந்தேடுவாளவளைக்
கலந்து வாழ்தல்
எடுத்தவிடைக் கொடியாரே தண்டலையாரே எவற்கு
மின்பமாமோ ?
குடித்தனம் செயவேண்டிப் பிடாரிதனைப் பெண்டு
வைத்துக்கொண்டதாமே".

*பொழிப்புரை :-* இடபக்கொடியினையுடைய ஏந்தால்! தண்டலைப் பெரியோய்! ஒருவனுக்கு வாய்த்த மனைவி அடுத்த வீடுகள் தோறும் சென்று அலைந்து கொண்டும், கணவன் உண்பதற்கு முன்னே உண்டும், கடுகடுப்பான வன்சொல் பேசியும், யாருக்கும் தெரியாது 'சிறுவாடு' எனும் சிறுதனம் பெருக்கியும் வாழ்பவளாய் அமைந்துவிட்டால் அவன் இவள்பால் எந்த இன்பத்தினைப் பெற முடியும். பிடாரி என்னும் பேயுடன் குடித்தனம் செய்வதற்கொப்பாகும் என இழித்தும், பழித்தும் இவ்வேந்திழையாளைப் பேசுகிறார் ஆசிரியர்.

OL Lord with the bull symbol in the flag and banner ! The lady who happens to be the better - half of one used to go door by door, takes food before her husband being fed, leads her life not in submissive manner, speaks always harsh words and ill of others, collects her small self pocket money without the knowledge of her husband is not at all considered to be the domestic house wife. She is like a devil doing harm to her husband and to her entire family.

83. உள்ளவரைக் கெடுத்தோரும் உதவியற்று
வாழ்ந்தோரும் உரை பொய்த்தோரும்
தள்ளி வழக்குரைத் தோரும் சற்குருவைப்
பழித்தோரும் சாய்ந்து போவார்
பள்ள வயற் றண்டலையார் பத்தரடி பணிந்தோரும்
பாட்டுரைக்கும்
பிள்ளைகளைப் பெற்றோரும் பிச்சையிட்டு
வாழ்ந்தோரும் பெருகுவாரே

*பொழிப்புரை :-* பிறருக்குத் தீமை செய்து வாழ்வோரும், உதவியின்றித் திறமையாய் வாழ்வோரும், பொய்கூறும் புலையர்களும், வல் வழக்கர்டுவோரும், தன் ஆசானைப்பழித்த பண்பிலாரும் பிறர் கெடுக்காது தானே எளிதில் அழிந்து போவார்கள். தண்டலை இறைவா! நின்னடி பணிந்த நேயரும், நற்பிள்ளைகளைப் பெற்ற பெருமையுடையோரும், அறம் செய்து வாழும் அறவோரும் உலகில் தழைத்து வாழ்வர் என ஆசிரியர் அறுதியிட்டு உறுதியாகக் கூறுகின்றார்.

Oh Lord ! Those who do harm to others, live without help leading life with lie and as litigant and dishonour the elder and the mentor will certainly meet their end with decay without enemy and those who lead a pious life with children and charity will definitely flourish with prosperity.

84. "ஓரையா மணிவீதி தண்டலை நீணெறியாரே யும்மைப் போலே
ஆரையாம் நம்பினர்க்கு மேன்மேலுமுதவி செய்வார் அரிவாட்டாயன்
பேரையா செல்வமும் போய் வறுமையாய் வெறுங்கூலிப் பிழைப்பாய்ப்பால்
கீரையாய் மாவடுவாய் வந்த தற்பின் புகழ்திரிய கிருபை செய்தீர்"

பொழிப்புரை :- தண்டலை நீணெறியாரே ! நும்போல் நம்பினர்க்கு உதவிசெய்யும் நல்லோர்கள் இந்நானிலத்தில் யாருளர் ? இதனால் தானோ "நம்பினோர் கெடுவதில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு" என்ற அருள்மொழி அலர்ந்தது போலும். அரிவாட்டாயர் சிவபிரானுக்குப் படைக்கும் மங்கலப் பொருள்கள் சிந்தியதற்காகத் தன் சிரசினை அரியத்துவங்கியவர். இறையருளால் அன்னார்க்கு கிட்டியதுபோல் அடியேனுக்கும் அருளவேண்டும் என அருளிரக்கின்றார் ஆசிரியர்.

Oh My lord of Dhandalai ! Who are there to render help to those who reach your lotus feet in the earth ? The believers in You never fade either by wealth or by health. The disciple of Lord Siva named after Arivattaya Nayanar began to behead himself with sword When the sacred offerings to Lord Siva fell in the ground. Even at that time you blessed him to attain heaven with your endless mercy and passion.

85. "பன்னகா வேணிப்பரமா தண்டலை சூழ்வள நாட்டில்
பலருங் கேளீர்
தன்னறிவுந் தன்மகிமை தன்மரபுக் கேற்றநடை
தருமேயல்லால்
சின்னவனும் பெரியதனமாய் நடந்தால் உள்ளதும் போம்
சிறியகாகம்
அன்னநடை நடக்கப்போய்த் தன்னடையுங் கெட்டவகை
ஆகுந்தானே,"

பொழிப்புரை:- அரவணைந்த சடைமுடியாய்! தண்டலை எம்பெருமானே! உலகில் உள்ள மக்கள் தம் நிலைக்கும் அறிவிற்கும், மரபிற்கும், பெருமைக்கும் ஏற்றவாறு நடந்து கொள்ள வேண்டுமேயன்றி சிறியவர் பெரியோர் போல் நடந்தால் உள்ளதும் போய் பேரிழிப்பினை எய்துவர். மேலும் காக்கை அன்னநடை நடக்கப்போய் தன் உண்மை நடையினை இழந்த பரிதாபத்திற்கு ஒப்பாகும் என ஆசிரியர் அழுத்தமாக எடுத்துரைக்கின்றார் இப்பாடலில்

Oh, Lord! Man should behave according to his knowledge, wealth, health and status, if he does not behave, he will reap the consequences loosing everything possessed so far. The action is likened to the crow which imitates the nice walk of a king swan looses its originality of its own pattern of walking.

86. "துன்மார்க்கற் காயிரந்தான் சொன்னாலும் மறந்து
விட்டுத் துடுக்கே செய்வார்
சன்மார்க்கற் கொருவார்த்தை சொல்லினுமே
செழுமுதுகிற் றழும்பாய்க் கொள்வார்
பன்மார்க்க மறை புகழும் தண்டலை நீணெரியாரே
பதுமையான
நன்மாட்டுக் கொருசூடு நற்பெண்டிர்க் கொருவார்த்தை
நடக்கையாமே"

பொழிப்புரை :- தண்டலை இறைவா! தீநெறி மேற்கொண்டொழுகும் சிறியோர்க்கு ஆயிரம் அறிவுரைகள்

கூறினாலும் அவைகளை மறந்துவிட்டு தீமைகளையே செய்வார்கள். ஆனால் நல்லறிவு மிக்கோர்க்கு ஒருவார்த்தை கூறினாலே அது முதுகிலிட்ட சூட்டு இலச்சினையாய் நின்று நிலவும். உடனே ஏற்றுத்தம்மைத் திருத்திக் கொள்வர். நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்பதும் நற்பெண்டிர்க்கு ஒரு வார்த்தை' என்பதும் உலகில் உலவி வரும் பழமொழிகள் ஆகும் என ஆசிரியர் அழகுற விளக்குகின்றார் இப்பாடலில்.

Oh, Almightly of Thandalai ! In spite of our repeated advice to the wicked, they never heed them and do harm to others. But the small piece of advice which stands for ever to the people of virtue and character, They will set right their defects and faults. The one burning mole is for an ox and one word for the chastity women.

87. பரங்கருணை வடிவாகும் தண்டலையார் வளநாட்டில்
பருவஞ் சேர்ந்த
தரஞ்சியது காமசரந்தனை யறிந்த அதிரூபத் தையலாரை
வரம்புறுதா டாண்மையில்லா மடையனுக்கே
கொடுத்தால் வாய்க்குமோ தான்
குரங்கினது கையில் நறும் பூமாலைதனைக் கொடுத்த
கொள்கை தானே

*பொழிப்புரை* :- கருணைவடிவாய் விளங்கும் தண்டலையார் வளநாட்டில் நற்பருவமும், நல்லெழிலும் செறிந்த நங்கை நல்லாளை ஆண்மையில்லா ஆடவன் ஒருவனுக்கு மணவினைப்படுத்தி வாழவைத்தல் குரங்கின் கையில் கொடுத்த நறுமணமிக்க பூமாலைக்கு நிகராகும் என ஆசிரியர் விளங்க வுரைக்கின்றார்.

The bride of tender youth, beauty and wise is married to an impotent bridegroom withwretched qualities, her life won't be prosperous. In such a way, the rose garland if it is offered to a monkey, the garland will be of no use.

88. 'வம்பரெல்லா மாதிக்க முடனிருந்தாலென்ன தோளில் மடங்கியோய்ந்த
பம்பரமாய் மூலையிலே கிடந்தாலுமென்ன அதில் பலனுண்டாமோ?
கம்புலவு தண்டலையார் வளநாட்டில் நீடுபல கழுதை தானே
அம்பலத்தில்கிடந்துமென்ன ஆக்கசத்தில் கிடந்துமென்ன ஆகுவாரே'.

*பொழிப்புரை:-* தண்டலைத் தலைவா! உலகில் வம்பர்கள் பேராதிக்கம் படைத்துப் பெருமையுடன் வாழ்ந்தாலோ அல்லது சிறுமையுற்று மூலையிலே முடங்கிக் கிடந்தாலோ யாரும் அவர்களைப்பற்றிக் கவல்வதில்லை. இச்செயல் பல கழுதைகள் அழகிய அம்பலத்தில் கிடந்தாலென்ன? அல்லது அழுக்குறுசேற்றில் அமிழ்ந்திக் கிடந்தால் என்ன? என அழகுற ஆசிரியர் இப்பாடலில் விளக்குகின்றார்.

Oh God! Whether the litigant lives in pomp and show and luxury or in utter poverty who cares about their growth or sufferings? This action is compared to the donkeys whether they are lying in the tidy ground or in drainage? Nobody cares about them.

89. "நாட்டிலுயர் தண்டலை நீ ணெரியாரே சரணமென்று நம்பினோர்க்கும்
போட்டி மிகத் துன்பம் வந்த வேளையிலே வுமைப்போலப் பொறுப்பாருண்டோ?
வீட்டிலுயர் வெள்ளாளர் கழுத்தறியும் வடிவாளை விலக்கிப்போய்
ஊட்டியறு முன்பு வந்துகைப்பிடித்து வேண்டியது முதவினீரே"

*பொழிப்புரை:-* தண்டலைப் பதியமர்ந்த கண்ணுதலே! உன் பாதகமலங்களைச் சரண்என்று பற்றினோர்க்கு எவ்வகைத் துன்பத்தினையும் நீக்கி இன்ப மளிக்க வல்லவன் நீ. தான்

வழிபடக் கொணர்ந்த நிவேதனப்பொருள் மண்ணில் வீழ்ந்து மாசடைந்தது என்பதற்காக அரிவாட்டாயர் என்னும் அடியார் தன் தலையை அரிந்து கொள்ளமுற்பட்டார். அவ்வேளையில் விரைந்து சென்று காத்த நும் திறம் போற்றற் குரியது என்று இறைவன் காலத்திற்செய்த உதவியைக் கவிஞர் போற்றுகின்றார் இப்பாடலில்.

Oh lord of Thandalai! Those who surrender your feet will be guarded by you without any fear and terror. The disciple of you named after Arivattayar began to behead himself at the time of his sacred things he collected for your pooja fell in the earth. You rushed to him and prevented him from doing so. The help rendered by you is considered worthier than the world.

90. "மையிலே தோய்ந்த விழிவஞ்சியரைத் தோய்ந்தவர்க்கு வறுமையுண்டு
மெய்யிலே புண்ணாகிக் கைப்பொருளுங் கேடாகி வீணணாவார்
செய்யிலே வளந்தழைத்த தண்டலை நீணெறியாரே சிவனே சொன்னேன்
கையிலே புண்ணிருக்கக் கண்ணாடி பார்ப்பதென்ன கருமந்தானே"

*பொழிப்புரை* :- செய்வளம் தழைத்த தண்டலைப் பெரியோனே! மையிட்டு அணி செய்த அகல்விழி மடத்தையராம் பரத்தையரின் மையலிலே தோய்ந்து வறுமை எய்தி உடலில் பல்வகையான புண்களையும் சுமந்து வறிதே அழிவர் இழிந்தோர். உலகில் கைப்பொருளும் இழந்து வீணன் என்ற பெயரையும் சுமந்து அவமே வாழ்வர் அறிவிலார். கையிலே உள்ள புண்ணிற்கு கண்ணாடி பார்ப்பது ஒப்பாகும். இச்செயல் என இழித்தும் பழித்தும் பேசுகின்றார் ஆசிரியர்.

Oh Lord! Thosh who derive sensual pleasure from the broad eyed, dual hearted dancing girls will definitely suffer from poverty and their skin and body will be affected by

diseases and the wealth he amassed will be spent soon. What is the use of looking at the mirror when there is wound in the hand?

91. ஆம்பிள்ளாய் எனக் கொடுக்கும் பெரியவரையடுத்தவரை
அவனிக்கெல்லாம்
நாம் பிள்ளாய் அதிகமென்பார் மருவலரும் ஏவல்செய்ய
நாளும் வாழ்வார்
வாம்பிள்ளாய் எனுமேனித் தண்டலையார் பூஷணமாய்
வளர்த்த நாகம்
ஏம்பிள்ளாய் கருடா நீ சுகமோ வென்றுரைத்த விதம்
என்னலாமோ"

பொழிப்புரை:- வம்மின் நமர்காள் என்று மக்களை அழைத்து அவர்களது இன்மைதீர ஈயும் பெரியவர்கட்கு அடுத்தவர்களேயன்றிப் பகைத்தவர்களும் பணி செய்து வாழ்வார்கள். அவர்கள் வாழ்வில் பகையின்றி அமைதி எய்தி வாழ்வர் அப்பெரியவர்களை அடுத்தவர்களும் பகைவர்கட்குப் பணியாது ஏறுபோற் பீடுநடையுற்றுச் செம்மாந்து வாழ்வர். இச்செயல் தண்டலைப் பெருமான் தலையில் தரித்த நாகம் வானில் பறக்கும் கருடனை நோக்கி கருடா நீ சுகமா? என வினவியது போலும் என வியக்கின்றார் ஆசிரியர்.

The men of charity will command respect from his own people as well as his enemies. The men who are offered help by virtuous people will never care for their enemies such as the cobra in the head of Lord Siva begins to ask the welfareness of the vulture of the sky.

92. சேணிலவு மதிச்சடைமார் தண்டலையார் வளநாட்டில்
சிறந்த பூணில்
காணவரு மன்னுடையார் அல்லாதார் கருமமெல்லாங்
கலந்து காணில்

ஆண்வலம் பெண்ணவலம் ஆடிய கூத்தவலமென
அலைந்து கேடாய்
நாணமில்லாக் கூத்தியர்க்கு நாலுதிக்கும் வாசலென
நடக்கையாமே"

*பொழிப்புரை:-* மதியைத் தரித்த பதியின் அருளாட்சி கொழிக்கும் தண்டலை நாட்டில் அவனது அருளைப்பெற விழையும் மண்ணவரும், விண்ணவரும் கலந்து நிற்கும் காட்சி மாண்புறு காட்சியாய் விளங்குகிறது. இச்செயல் நாணமில்லாக் கூத்தியர்க்கு நாலுதிக்கும் வாசல்போல் உள்ளது என ஆசிரியர் வியந்து உரைக்கின்றார்.

The people of earth and heaven assemble in front of the temple at Thandalai just to offer there prayer and to see the majestic appearance of the lord. They are wide spread and mingle with each other and this scene deserves to be seen by each and every devotee. The action is compared to the Dancing girl without any shy entering the gates of all directions,

93. 'நித்தமெழுநூறு நன்றி செய்தாலும் மொருதீது நேரே
வந்தால்
அத்தனையும் தீதென்பார் அழிகருமஞ் செய்வர்
குணமகற்றலாமோ ?
வித்தகஞ்சேர் தண்டலையார் வளநாட்டிற் சாம்பலிட்டு
விளக்கினாலும்
ஏத்தனை செய்தாலுமென்ன பித்தளைக்குத் தன்னாற்ற
மியற்கை தானே"

*பொழிப்புரை:-* தண்டலைப்பெரும! நாடோறும் பல நன்மைகளைச் செய்து ஒருநாள் மட்டும் ஆராயாது ஒரு தீமையினைச் செய்யநேரிட்டால் அத்தீயோர் முன்செய்த அத்துணை நன்மைகளையும் மறந்து தீமைகளையே நினைத்துத் தீமை செய்து வாழ்வர். இது அவர்களின் இயற்கை நியதியாகவும், செயலாகவும் கருதப்படும் சாம்பலிட்டு எத்துணை முயன்று விளக்கினாலும் பித்தளையின் தன்மையினை தீர்க்க முடியுமா என ஆசிரியர் இகழ்ந்து விளக்கு கின்றார்.

Oh Lord of Thandalai. It is quite natural for the wicked people who always do harm to the people in spite of their many helps being rendered. This act is just like the brass worn't be free from its quality in spite of its being rubbed by ashes.

94. "காடுண்ட மலர்ச்சோலைத் தண்டலையார் அடிபரவுங் கற்றோரெல்லாங்
கோடுண்ட வறுமையினா லொருவனைக்கொண்டாடி யொன்றைக் கொளுத்தும்போது
ஏடுண்ட மதுரமொழி யிருந்தாலென் சபையிலொன்றை ஈய்த்தா தாகில்
சூடுண்ட பூனை யடுப்பங்கரை நாடாது சுற்றுந்தானே"

*பொழிப்புரை ;-* பூம்பொழில் சூழ் தண்டலைத் தலைவா ! நும்மடி பரவும் கற்றோரெல்லாம் வறுமையினால் துன்புற்று ஒருவனை வாழ்த்தியும், மற்றவனைத் தாழ்த்தியும் பேசத் தலைப்படுவர்.வாழ்த்தப்பட்டோர் மகிழ்ச்சியுறவும், தாழ்த்தப் பட்டோர் தளர்வுற்றுத் துன்புறவும் நேரிடுகிறது. இச் செயல் சூடுண்ட பூனை அடுக்களையினை நாடாத செயல் போல் உள்ளது என ஆசிரியர் அழகுற விளக்குகின்றூர்.

Oh Lord of Thandalai ! The disciples who are at your service being poverty stricken they begin to praise somebody to get their favour and speak ill of others white they deny some presentation to them. The cat got injured already in the kitchen never look at the place.

95. "சீருலவு தண்டலையார் வள நாட்டில் எல்லோருந் தேரான் தீமை
வார்மிகு பிள்ளைதனை அரிந்துண்டா னொருவேந்தன் மணமாய்க் கொண்ட
ஆர்வமிகு மனைக்கிழத்தி ஆண்டிச்சி வடிவு கொண்டாளாதலாலே
ஊரில் ஒருவன் தோழன் ஆரும் மற்றதே தார முண்மை தானே"

*பொழிப்புரை :-* தண்டலைப் பதியின் தலைவா ! நும்வள நாட்டில் தீமையினை ஆராயாது தான் பெற்ற பிள்ளை யினையே கறி சமைத்து உண்டான் ஒரு மன்னன். தான் மணந்து கொண்ட மனைக்கிழத்தியினை எளிய துறவியாக ஆக்கிக் கொண்டான் பிறிதொரு அடியான் என ஆசிரியர் இப்பாடலில் அழகுற தெய்வப் பணியின் சிறப்பினை விளக்கு கின்றார்.

Oh lord ! One of your disciples who happens to be a ruler of a kingdom slaughtered his son and ate his flesh and another devotee who married a lady made her at last an austeree.

96. "கற்பூரவல்லி யொருபாகா செழுந் தண்டலையார்
கடல் நேர் சூழ்ந்த
நற்பூமிதனிற் பிறந்தா ரெல்லோரு மக்களென்று
நாட்டலாமோ ?
அற்பூரும் பண்புடையார் நற்குணமும் பண்பில்லா
ரழகுங் காணிற்
பொற்பூவும் வாசனையும் போல் நடக்கும் புனமுருக்கம்
பூவுமாமே"

*பொழிப்புரை :-* உமையொரு பாகா ! தண்டலையின் கண்ணுதலே ! ஆழிசூழ் உலகில் பிறந்த அனைவரையும் மக்களென்று நாம் கருதி மதிப்பளிக்க இயலுமா ? அன்பு தழைத்த பண்பாளர் செயலும், அன்பற்ற பண்பிலியின் செயலையும் ஆராய்ந்து நோக்கின் மணமுள்ள மலருக்கும், முருக்கம் பூவினுக்கும் ஒப்பாகும் என ஆசிரியர் உவமை கூறுகின்றார்.

The lord, the Consort of Uma of Thandalai the man born in the earth can't be named after as man of character The men of virtual character and the men of vices are not at all alike they are compared to the golden flower with fragrance and the flower of rum stick tree.

97. வள்ளுவர் நூலாதி பல நூலிருக்க வதன்பொருளின்
வன்மையெல்லாம்
உள்ளபடி தெளிந்த மைந்தர் பெரியவர் காண
முன்னிவனும் ஒருவன் போல்
பள்ளமுது நீருலகில் பழகு பழமொழி விளக்கம் பரிந்துகூர
வெள்ளை மதியினன் கொல்லர் தெருத்தனிலே ஊசி
விற்ற வினையந்தர்னே!

*பொழிப்புரை :-* வள்ளுவர் அருளிய திருக்குறள் போன்ற அறநூல்கள் பலவற்றைக் கற்றுத் தெளிந்து ஆன்று அவிந்தடங்கிய சான்றோர் முன்னே ஒருவன் தான் கற்ற அறக் கருத்துக்கள், முதுமொழிகள் முதலியவற்றை விளக்கம் கூறப் புகுதல் கொல்லன் தெருவில் ஊசிவிற்ற வீண்செயலுக்கு ஒப்பாகும் என ஆசிரியர் மிக அழகாக இப்பாடலில் விளக்குகின்றார். * இப்பாடல் ஒன்றில் மட்டுமே பாட்டுடைத்தலைவர் தண்டலையார் விளி அமையப் பெறவில்லை.

One who begins to preach the moral code before the elders who are proficient in Thirukural and other ethical literatures is like one who sells the needle in the street of black smiths.

98. "சர்ப்ப முள்ள மதிபுனலோடு அறுகு கொன்றை தும்பை
தன்னைச் சூடி
பற்பல செந்தமிழ் வாணர்கவி சொரியத் தண்டலையார்
பதியில் வாழும்
அற்புவிடை மடந்தையுமை மயிலை யொரு பாகம்
வைத்தோனருமைப்பாடல்
கற்பவர் கேட்போர் படிப்போர் கற்பக நாடிருந்து கயிலை
சேர்வார் தாமே."

**பொழிப்புரை :-** அரவமும், பிறையும், அறுகும், கங்கையும், கொன்றை, தும்பையும் தன்சடையிற் சூடிய பெம்மானைச் செந்தமிழ்ப் புலவர்கள் செழுந்தமிழில் பாடிச் சிறப்பித்துள்ளனர். சீரும் சிறப்புமிக்க தண்டலைப்பதியில்

அமர்ந்துள்ளவரும், இடபத்தில் ஏறி உமையினை ஒருபுடை கொண்ட உமாமகேசனின் அருமைப்பாடல்களை ஆழக் கற்றோரும் அமைதியுறக்கேட்டாரும், கற்பகத்தருச் சூழ்ந்த இந்திரவுலகில் இருந்து கயிலாயத்தை அடைந்து கண்ணுதற் பெருமானின் கழலிணை நண்ணுவர் என அழகுற எடுத்தோதி நூலினை நிறைவு செய்கின்றார் ஆசிரியர்.

Men, having deep sense of devotion at Lord of Thandalai who had been celebrated in hymns like Thevaram and Thirupukazh and those who used to learn these immortal songs and those who listen to the exposition of elders of ripe wisdom, will attain the elernal life in heaven clinging to the lotus feet of Lord Siva in Kailash.

பிற்சேர்க்கை (ஏட்டில் கடைசியில் இடம் பெற்றுள்ளது)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ |
| ௭ | ௮ | ௯ | ௧ | ௨ | ௩ |
| ௪ | ௫ | ௬ | ௭ | ௮ | ௯ |
| ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ |
| ௭ | ௮ | ௯ | ௧ | ௨ | ௩ |
| ௪ | ௫ | ௬ | ௭ | ௮ | ௯ |

ஒன்றுக்கு நினைத்த காரியம் பலமாகும்.

இரண்டிற்கு ஆயாசப்படவேண்டாம். எண்ணிய கிரியை யுண்டு. சத்துரு விரோதம் நிச்சயம்.

மூன்றினுக்கு சத்துருக்கள் பலாயானமாவார்கள். விசனப் படாதே. நன்மைண்யுடாகும். நம்பு.

நான்கிற்கு எந்தக் காரியம் நினைத்துக் கொண்டாலும் தீமைவருமே யல்லாது நன்மைவாராது.

ஐந்திற்கு நன்மைக்கு...மாச்சுது. தீமை விலகிப்போகுது. விசனப்படாதே. நம்பு.

ஆறுக்கு சீக்கிரத்தில் கெடுதி சம்பவிக்கிறது.

ஏழுக்கு தீமை வரமாட்டாது பகவான் அனுக்கிரகத்தால் நன்மையே சம்பவிக்கும்.

எட்டுக்கு மனதுக்கு வருத்தம், ஆனால் தீமைவராது. விசனப்படாதிரு.

ஒன்பதுக்கு உனக்கு இனிமேல் நன்மையைத் தவிர தீமை வராது. விசனப்படாதிரு.

ஸ்ரீ ராமசாமி துணை-ஹரிஓம்-சகலதேவதைகளும் துணை

| | | |
|---|---|---|
| ௬ | அ | ச |
| உ | ௯ | ௫ |
| ௪ | எ | ௬ |

ஒன்றுக்கு - லாபம்
இரண்டுக்கு - நாசம்
மூன்றுக்கு - சோனகம்
நாலுக்குப் - பீடை
ஐந்திற்கு - க்ஷேமம்
ஆறுக்கு - கலகம்
ஏழுக்கு - தனம்
எட்டுக்கு - மரணம்
ஒன்பதுக்கு - பிரீதி
சீதையம்மன் துணை

ஹரி ஓம் குருவே துணை

| | | |
|---|---|---|
| புதன் ௰ | சுக்கிர ௯ | சந்திரன் உ |
| குரு ௪ | சூரியன் ௫ | செவ்வாய் எ |
| கேது அ | சனி ௧ | இராகு ௬ |

## வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள் பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் எம்மிடம் அன்பளிப்பாக கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாக வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே “ நாம் பெற்றபேறு பெறுக இவ்வையகம் ” என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

T. R இராமசாமி, இ. ஆ. ப.
மாவட்ட ஆட்சியர் & (இயக்குனர்)
நிர்வாகக் குழு, சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
8 — 10 — 85